இதழ் 359
04 அக்டோபர் 2025
14 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube. com/@IlakkuWeb2. 0
LIKE US! facebook. com/ilakku. ilakku. 10
FOLLOW US! twitter. com/Ilakku1



இலங்கை இந்திய கூட்டுச்சதியால் 05/10/1987இல் வீரகாவியமாகிய லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் 38ஆவது நிறைவாண்டின் நினைவு சுமந்து...

## காணாமல் ஆக்கப்பட்ட மாகாண சபை தேர்தலும்! கண்டுகொள்ளாத இந்திய அரசும்! திண்டாடும் தமிழ்தேசிய கட்சிகளும்!

பா. அரியநேத்திரன்



# அநுரவின் மறதியும் அபேசிங்கவின் உறுதியும்

விதுரன்




# அமெரிக்க அரசின் முடக்கம் பாதிப்புகள் என்ன?

வேல்ஸில் இருந்து அருஸ்

## பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக அதைவிட பாரதூரமான சட்டம் கொண்டு வரப்படும்!



பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும் அதை விடவும் பாரதூரமான சட்ட மொன்றை கொண்டுவருவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. என ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

“பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம் தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை மறந்துவிட்டே அரசாங்கம் செயற்படுகின்றது எனவும், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களிலேயே பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம் பற்றி அதிகளவில் இந்த அரசால் பேசப்பட்டது எனவும் இது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தைத் திசை திருப்பும் நோக்கிலேயே கூறப்பட்டுள்ளது.” எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கினாலும்கூட அதனை விடப் பாரதூரமான சட்ட மொன்றைக் கொண்டுவருவதற்கே ஆளுங் கட்சி முற்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

மேலும் மன்னாரில் மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளது அது குட்டி நேபாளமாகக் காட்சியளித்துள்ளது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

## அரசாங்கம் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களின் உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும் : சுரேஷ்

மன்னார்த்தீவுப்பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்கோபுரங்களால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதுடன், சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று சமூக ஆர்வலர்களும், சூழலியலாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், அரசாங்கம் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களின் வாழ்வியல் உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அமெரிக்கா, ஜப்பான் பயணத்தை முடித்து அவசரமாக மகாநாயக்கர்களை சந்தித்த ஜனாதிபதி அநுர

இரண்டு நாடுகளான அமரிக்கா, ஜப்பான் சென்று நாடுதிரும்பிய கையோடு மகாநாயக்கர்களை அவசர அவசரமாக ஜனாதிபதி ஏன் சந்தித்து ஆசிபெற்றார் என்பது தொடர்பாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து தரப்பு மகாநாயக்க தேரர்களை (03/10/2025) பிற்பகல் சந்தித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அவர்களிடம் ஆசி பெற்றார்.

முதலில், மல்வத்து மகா விஹாரைக்கு சென்ற ஜனாதிபதி, மல்வத்து மகா நாயக்க தேரர் அதிவணக்கத்திற்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து ஆசி பெற்றதோடு அவருடன் சிறிது நேரம் உரையாடலில் ஈடுபட்டார்.

பின்னர், அஸ்கிரிய மகா விஹாரைக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரிய மகா நாயக்க தேரர் அதிவணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரின் நலம் குறித்து கேட்டறிந்ததோடு அவருடனும் சிறு உரையாடலில் ஈடுபட்டார்.

## தமிழ் இளையோர் மாநாடு 2025 லண்டன்

ஐரோப்பா முழுவதிலும் வாழும் தமிழ் இளைஞர்களை ஒன்றிணைத்த தமிழ் இளைஞர் மாநாடு லண்டனில் கடந்த சனிக்கிழமை(27) நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஊக்கமளிக்கும் பேச்சுக்கள், ஊடாடும் பட்டறைகள் மற்றும் மதிப்புமிக்க தொழில்நுட்ப வலையமைப்பு (நெட்வொர்க்கிங்) வாய்ப்புகள் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றன. இவை அனைத்தும் இளம் தமிழர்களை அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன.




புகழ்பெற்ற பேச்சாளர்கள் மற்றும் வெற்றிகரமான நிபுணர்களின் பங்களிப்புகளுடன், மாநாடு பயனுள்ளதாக மற்றும் உத்வேகத்துடன் இடம்பெற்றிருந்தது. கலாச்சார பரிமாற்றம் மற்றும் வலுவான சமூக உணர்வு இந்த நிகழ்வை மேலும் சிறப்பானதாக்கியது.

## காசாவுக்கு உதவிக்கு சென்ற கப்பல்களை கைப்பற்றியது இஸ்ரேல்



பாலஸ்தீனப் பகுதிக்கு மிகப்பெரிய கடற்படை உதவிப் பணிகளில் ஒன்றாக உலகளாவிய கவனத்தை ஈர்த்த, காசா மீதான இஸ்ரேலின் முற்றுகையை உடைக்க முயன்ற குளோபல் சுமுத் புளோட்டிலா என்ற கப்பல் தொகுதியில் உள்ள அனைத்து கப்பல்களையும் இஸ்ரேலியப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துள்ளன.

சுமார் 500 ஆர்வலர்களை ஏற்றிச் சென்ற குறைந்தது 44 பொது மக்கள் படகுகளை உள்ளடக்கிய கப்பல் தொகுதியை புதன் கிழமை(1) இரவு இஸ்ரேலியப்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ‘ஜெனரல் இசட் மடகாஸ்கர்’ - மற்று மொரு நாடு வீழ்கின்றது

மடகாஸ்கர் முழுவதும் இடம் பெறும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்டுள்ள ஆர்ப்பாட்டக் காரர்கள் ஜனாதிபதி ஆண்ட்ரி ராஜோலினாவின் ராஜினாமாவைக் கோரி வருகின்றனர், அவரது நிர்வாகம் தவறான நிர்வாகம் மற்றும் நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை சேவைகளில் தோல்வியடைந்ததாக குற்றம் சாட்டி வருகின்றனர்.



புதன்கிழமை(1) மீண்டும் இளைஞர்கள் தலைமையிலான ‘ஜெனரல் இசட் மட காஸ்கர்’ பதாகையின் கீழ் ஆயிரக்கணக்கானோர் பேரணி நடத்தினர், தலைநகர் அன்டனனரிவோ மற்றும் பிற

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## 500 பில்லியன் டொலர்களை எட்டியது எலன் மஸ்கின் சொத்து மதிப்பு


அமெரிக்காவைச் சேர்ந்த டெஸ்லாவின் தலைவர் எலான் மஸ்க், 500 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான நிகர மதிப்பை எட்டிய முதல் நபராக உலகில் மாறியுள்ளார், அவரின் மின்சார கார் நிறுவனம் மற்றும் அவரது பிற வணிகங்களின் மதிப்பு இந்த ஆண்டு உயர்ந்துள்ளதால் இவர் இந்த நிலையை அடைந்துள்ளார்.



புதன்கிழமை(1) பிற்பகல் நியூயார்க் நேரப்படி தொழில்நுட்ப வல்லுநரின் நிகர மதிப்பு $500.1 பில்லியனை எட்டியது, பின்னர் சிறிது குறைந்து $499 பில்லியனுக்கும் அதிகமாக இருந்தது என்று ஃபோர்ப்ஸின் பில்லியனர்கள் குறியீடு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## இனப்படுகொலை குறித்து அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடல்



அவுஸ்திரேலியாவின் நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தின் தமிழ் அகதிகளுக்கான சபையின் ஒருங்கிணைப்பாளர் கல்யாணி இன்பக்குமார் மற்றும் செய்தித் தொடர்பாளர் ரேணுகா இன்பக்குமார் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை(2) பார்டன் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி அஸ்வினி “ஆஷ்” அம்பிஹைபஹார் அவர்களை சந்தித்தனர்.

இந்தக் கூட்டத்தில், இலங்கை அரசு தமிழ் ஈழத்திற்கு எதிராக நடத்திய இனப்படுகொலைக்கான வலுவான ஆதாரங்களை அவர்கள்முன்வைத்தனர். திட்டமிட்ட வன்முறை,

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## பிள்ளையான் நேரடித்தொடர்பு எனின் அவருக்கு கட்டளையிட்ட பெரும் புள்ளி யார்?

**பா. அரியநேத்திரன்**

*உயிர்த்த ஞாயிறு தற்கொலைத்தாக்குதல்களுக்கும் பிள்ளையானுக்கும் நேரடித்தொடர்பு என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால ஈஷ்டர் குண்டு தாக்குதல் 2019,ஏப்ரல்,19ல் இடம்பெற்று 06, வருடங்கள் 05, மாதங்கள் 13, நாட்கள் கடந்த பின்னர் கடந்த வியாழக்கிழமை 2025, அக்டோபர், 02 ல் கூறியுள்ளார்.*



*பிள்ளையான் எனப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன், 2025,ஏப்ரல்,08, ல்,குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மட்டக்களப்பில் உள்ள அவரது கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திர நாத் கடத்தப்பட்ட விவகாரமே அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் என்று அப்போது கூறப்படுகிறது.*

*ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நேரடித் தொடர்பு பிள்ளையான் என்ற தகவல் இப்போது ஒரு அமைச்சரே உறுதிப்படுத்திவிட்டார்.*

*இலங்கை உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் 2019 ஏப்ரல் 21 உயிர்ப்பு ஞாயிறு அன்று இலங்கையின் தலைநகர் கொழும்பு உட்பட மூன்று நகரங்களிலும், மட்டக்களப்பில் தேவாலயத்திலும் இடம்பெற்றன. மூன்று கிறிஸ்தவக் கோவில்களிலும், மூன்று ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளிலும் இத்தொடர் குண்டு வெடிப்புகள் காலை 08.30 இற்கும் 09.15 மணிக்கு மிடையில் நிகழ்ந்தன. 39 வெளிநாட்டவர்கள்,03 காவல் துறையினர் உட்படக் குறைந்தது 253 பேர் வரை கொல்லப்பட்டனர்,*

*500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கொழும்பு கொச்சிக்கடை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களில் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி நிகழ்வுகள் நடைபெற்ற போது குண்டுகள் வெடித்தன. ஏனைய குண்டுகள் கொழும்பின் நடுப்பகுதியில் அமைந்திருந்த சங்கிரி-லா உணவகம், சினமன் கிராண்ட் உணவகம், கிங்சுபரி உணவகம் ஆகிய மூன்று நட்சத்திர உணவுவிடுதிகளில் வெடித்தன. இத்தாக்குதல்கள் தொடர்பாக 13 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.*

*இந்த தாக்குதல் இடம்பெறும்போது ஆட்சியில் ஜனாதிபதியாக இருந்தவர் மைத்திரிபால சிறிசேன ஈஷ்டர் குண்டு தாக்குதல் இடம்பெற்று ஏறக்குறைய 07, மாதங்களில் 2019, நவம்பர், 16, ல் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று கோட்டபாயராஷபக்ஷ ஜனாதிபதியானார்.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் யோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்ட சந்திரகாந்தன் 2015 அக்டோபர் 14 அன்று கைது செய்யப்பட்டுக் மட்டக்களப்பு சிறைச்சாலையில் 2020, நவம்பர்,24, வரை சுமார் 05, வருடங்கள் சந்தேக நபர் கைதியாக சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.*

*அவர் பிணையில் விடுதலை செய்வதற்கு 01, வருடமும்,07, மாதங்களுக்கு முன்னரே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடந்தது.*

*பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால ஈஷ்டர் குண்டுத்தாக்குதலில் பிள்ளையானுக்கும் தொடர்பு இருந்தது என கூறவில்லை அப்படி கூறியிருந்தால் பலருடன் பிள்ளையானும் ஒருவன் என*

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

இலக்கு

## இறைமையுள்ள ஈழத்தமிழரை மோதலாளர்களாக மாற்றும் பிரித்தானியா தலைமையிலான அனுசரணைக்குழுவினர்

புதிய தாராண்மைவாதமானது உலகளாவிய நிலையில் நாடுகளையே விழுங்கி வரும் அபாயகரமான இன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவிலேயே அரசாங்கம் செயலிழக்கும் அளவுக்கு பொருளாதார நெருக்கடி வேகம் பெற்றுள்ள நேரத்தில் தன்னியக்க 'ட்ரோன்களால்' சுவர் எழுப்பி வானைப் பாதுகாக்கும் முயற்சியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அக்கறை செலுத்தும் காலத்தில், காசாவில் ட்ரம்பின் தலைமையில் ரோனி பிளேயர் நிர்வாகத்தில் உருவாக்கப்படும் ஆட்சி முறைமையே பலஸ்தீனத்தை நாடுகள் பல அங்கீகரித்தாலும் நடைமுறை தீர்வு எனப் பிரகடனம் செய்யப்படுவதை யாராலுமே தடுக்கவியலாத கோலத்தைக் காண்கின்றோம். இந்நேரத்தில் மகிந்த கோத்தபாய ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை இல்லை அரசியல் அதிகாரப்பரவலாக்கல் தேவையில்லை சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்த நாம் அவர்களுக்கே அரசியல் பணிகள் செய்வோம் எனக் கூறித் தொடங்கிய ஒரு கட்சி ஒரு சட்டம் என்ற நோக்கின் அநுர ஆட்சித் தொடர்ச்சியாகப் பிரித்தானியா தலைமை வகிக்கும் அனுசரணைக் குழுவிடம் இனப்பிரச்சினை என்பதை மோதல்கள் என மாற்றக் கேட்டதாகவும் அதனால் தாங்கள் அவ்வாறு மாற்றியுள்ளதாகவும் பிரித்தானியா விளக்கமளித்ததாக சட்டத்தரணி சுமந்திரன் அவர்கள் 03.10.2025ம் திகதிய வீரகேசரிப் பத்திரிகையின் முன்பக்கச் செய்தியில் தெரிவித்துள்ளார். கூடவே நீதி விசாரணை முறைமைகள் குறித்த முன்னைய கடும்போக்கான அணுகுமுறைகளை கூடச் சிறிலங்கா கேட்டதற்கு இணங்க மாற்றியுள்ளதாகவும் செய்தி தெரிவிக்கின்றது. அப்படியானால் இன்றைய பிரித்தானிய லேபராட்சியாளர்களும் அன்றைய லேபர் கட்சி 80 ஆண்டுகளுக்கு முன்னர் சோல்பரி அரசியலமைப்பயை 09.10. 1945 இல் வெளியிட்டு ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை இழக்க வைத்தது போல் செயற்படுகிறார்களா? என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

1948 முதல் இன்று வரை ஈழத்தமிழர்கள் எத்தகைய இனஅழிப்புக்குள் இனங்காணக்கூடிய அச்சத்துடன் வாழ்கின்றார்கள் என்பது உலகெங்கும் தெளிவாக்கப்பட்ட நிலையிலும் மீளவும் சிங்களவர்கள் சார்பாகவே செயற்படுவது என்பது 1945 இல் சிங்களவர்களிடம் ஈழத்தமிழரிறைமையை கையளித்த பிரித்தானியா 2025 இல் சிங்களவர்க்கு ஈழத்தமிழர் தேசிய நீக்கத்துக்கு உதவுகிறது என்ற கருத்தினையே இலக்கு வெளிப்படுத்த வைக்கிறது. இந்நிலையில் சிறுபான்மையினம் என்பதையும் இழந்து சிறுபான்மையினத்தவர்க்கான அனைத்துலகச் சட்டப்பாதுகாப்பையும் ஈழத்தமிழர்கள் இழக்கின்ற இன்றைய காலகட்டத்தில் எவ்வாறு ஈழத்தமிழர்கள் தங்கள் எதிர்காலத்தை அமைக்கப் போகிறார்கள் என்பதற்கு ஈழத் தமிழர்கள் ஒருமைப்பாட்டால் மட்டுமே அதனைச் செய்யலாம் என்பதே இலக்கின் இவ்வாரப்பதில்.

இவ்விடத்தில் ஈழத்தமிழர் இறைமை மீளுறுதியைச் சட்டத்தால் வெல்லுவோம் என்பவர்களுக்கும் அனைத்துலகத் தொடர்பால் வெல்வோம் என்பவர்களுக்கும் முதலில் பிரித்தானிய காலனித்தவ காலத்து வரலாற்றை அவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வது அவசியம். பிரித்தானிய காலனித்துவ கால வரலாற்றை இங்கு சுருக்கமாக மீள்வாசிப்பு செய்ய இலக்கு விரும்புகிறது. எண்பது ஆண்டுகளுக்கு முன்பு 26.07.1945 இல் பிரித்தானியாவில் லேபர் கட்சியின் பிரதமர் அட்லி பிரபு ஆட்சிப்பொறுப்பேற்றார். அந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி பிரித்தானியாவில் லேபர் கட்சி பிரதமர் அட்லி பிரபு தலைமையில் சோல்பரி அரசியலமைப்பைச் சிங்களவர்களுக்குச் சாதகமாக வெளியிட்டது. இதன் மூலம் தாங்கள் 1796 இல் போர்த்துக்கேய ஒல்லாந்த காலனித்துவ ஆட்சியாளர்கள் வழி கைவசப்படுத்திய ஈழத்தமிழரின் யாழ்ப்பாண அரசினது இறைமையையும் தன்னாட்சியையும், 1832 இல் நேரடியாகக் கைபற்றிய வன்னியரசினது இறைமையையும் தன்னாட்சியையும், சிங்களப்பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமை கொண்ட சிலோன் என்னும் தாங்கள் தன்னிச்சையாக ஈழத்தமிழரின் விருப்புப் பெறப்படாது ஈழத்தமிழரின் இறைமையுள்ள அரசுக்களின் எல்லைகளைச் சிங்களவர்களின் எல்லைகளுடன் இணைத்து 1833இல் உருவாக்கிய அரசாங்கத்திற்குச் சுதந்திரத்தை வழங்க முற்பட்டதன் மூலம் ஈழத்தமிழரின் இறைமையையும் தன்னாட்சியையும் சிங்களவர்களிடம் கையளித்தனர் என்பது வரலாறு.

பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தின் 1931ம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்பின் மூலம் இலங்கைத்தீவில் தனியான அரசுக்களுடன் வடக்கு கிழக்கில் யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் நிலப்பரப்பில் தமக்கான தனித்துவமான தேசஇனத்தன்மையுடன் வாழ்ந்து வந்த எண்ணிக்கையில் சிங்களவர்களை விட குறைவான மக்கள் தொகையைக் கொண்டிருந்த ஈழத்தமிழர்களுக்கும், அதனைக் கவனத்தில் எடுக்காது சிங்களவர்க்களுக்கும் பொதுவான சட்டசபையினை அமைத்து 18 வயதடைந்த எல்லோருக்கும் வாக்குரிமையெனத் தோற்றுவித்த பிரதிநிதித்துவ முறை மூலம் சிங்களப் பெரும்பான்மையினம் தமிழ்ச் சிறுபான்மையினம் என்ற இனத்துவ வடிவ ஆட்சி அமைப்பைத் தோற்றுவித்து ஈழத்தமிழர்களின் தேச இனத்தன்மையை இல்லாதொழித்தனர். இவற்றை எல்லாம் கவனத்திற்கு எடுத்து 03.11. 1945 இல் அக்கால ஈழத்தமிழர்களின் தலைவரான ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் காலனித்துவ நாடுகளின் செயலாளராக விளங்கிய ஜோர்ஜ் ஹென்றி ஹோலுக்கு சோல்பரி அரசியலமைப்பு ஈழத்தமிழர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளதாகக் கூறி அதனை ஏற்க இயலாமைக்கான காரணங்களை விளக்கி தெளிவான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதற்கு முன்னரே 13.06.1945 இல் இலங்கையின் பிரித்தானிய ஆளுநராகிய சேர். எச் மூருக்கு ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் பிரித்தானிய காலனித்துவ நாடுகளுக்கான செயலாளர், இலங்கையின் அமைச்சரவையின் தலைவரான டி.எஸ். சேனநாயக்காவுக்கும் இலங்கைக்கான அரசியலமைப்புக் குறித்துப் பேசும் பொழுது சிங்கள பௌத்தரான அவர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினால் அது சிங்கள பௌத்த பேரினவாத அரசை உருவாக்குமென்பதை விளக்கித் தமிழர்களின் பிரதிநிதியையும் இணைத்து வைத்துப் பேசும்படி அறிவுறுத்தியிருந்தார்.

இதனை ஆளுநர் சேர். எச் மூர் தந்தி மூலம் அக்கால காலனித்துவ நாடுகளின் செயலாளர் ஸ்டான்லி ஒலிவர் பிரெட்ரிக் ஜோர்ஜ்க்கு தெரிவித்திருந்தார். அத்துடன் பிரித்தானிய ஆளுநருக்கும் டி. எஸ. சேனநாயக்காவுக்கும் இடையில் இருந்த உறவுநிலையால் ஆளுநர் ஜி.ஜி. பொன்னம்பலத்தைச் சந்திக்க அனுமதிக்க வேண்டாம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டிருந்தார். இதனாலேயே ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் இலண்டனுக்கு நேரடியாகச் சென்ற போதிலும் கூட பிரித்தானிய காலனித்துவ நாடுகளுக்கான செயலாளர் அவரைச் சந்திக்க அனுமதிக்கவில்லை. ஆயினும் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் காலனித்துவ நாடுகளின் செயலாளராக இருந்த கிரிச் யோன்ஸ் ஆதரின் நிர்வாக அதிகாரியிடம் தனது கருத்துக்களை விளக்கிவிட்டு நாடு திரும்பியமை வரலாறாக உள்ளது.

1937ம் ஆண்டு முதல் 17.10. 1944 வரை இலங்கைக்கான பிரித்தானிய ஆளுநராக இருந்த கல்கெட் அன்ரூ அவர்கள் சிலனிஸாக விடயங்களை அணுகப் பழக்கும் நோக்கில் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் சட்டசபையில் தமிழர்களுக்கான பிரதிநித்துவ எண்ணிக்கை சிங்களவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக அமைக்கப்பட்டாலே சிங்கள பெரும்பான்மைப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை உருவாவதைத் தடுக்கலாம் என்பதனை எதிர்த்து வந்தார். இந்த ஆளுநர் 17.10. 1944 இல் இலங்கையிலிருந்து நீங்கி சேர் ஹென்றி மூர் புதிய ஆளுநராகப் பதவியேற்ற பின்னரே 29.10.1945 இல் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசை நிறுவி 1939 அக்டோபர் முதலான சிறுபான்மையினத்தவரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை சரியான முறையில் அமைப்பதன் மூலம் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தனது சட்டரீதியான சிந்தனைகளை வளர்த்து, 50க்கு 50 என்கின்ற விகிதத்தில் பாராளுமன்றத்தில் சிங்கள மற்றும் சிறுபான்மையின பிரதிநிதித்துவத்தைப் பெற முயன்று வந்தார்.

இந்நேரத்தில் 1944 செப்டெம்பர் மாதம் 1ம் திகதியே தமிழகத்தின் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருகோணமலை றோயல் நேவியில் மருத்துவராகப் பணியாற்றிய எஸ் பொன்னையா அவர்கள் பிரித்தானியக் காலனித்துவச் செயலாளருக்கு "தமிழ் இலங்கை" என இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களை அறிவிக்கும்படி அனுப்பியிருந்த மனுவானது ஈழத்தமிழர்களின் தாயக இறைமை தேசியத் தனித்துவம் தன்னாட்சி என்பன ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளரச்சிகளுக்கும் மட்டுமல்ல இந்திய சிறிலங்கா இடையான நாடாக இருநாடுகளினதும் அனைத்துத் தொடர்பாடலுக்கும் முக்கியமானது என்பதையும் இதனை பிரித்தானியா செய்யாது விட்டால் தமிழர்கள் இனஅழிப்புக்கு பண்பாட்டு இனஅழிப்புக்கு இனத்துடைப்புக்கு உள்ளாவார்கள் என்பதையும் விளக்கியிருந்தது. இம்மனு குடிசார் அமைப்பு கோரிக்கையாக இருந்தும் இதனையும் பிரித்தானியா கவனத்தில் எடுக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக 03.11.1945 இல் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் காலனித்துவ நாடுகளின் செயலாளர் ஹோல் அவர்களுக்கு அனுப்பிய மிக நீண்ட மனு சட்டரீதியாக இலங்கைத் தமிழர்களின் தேவைகளை வெளிப்படுத்திய மிகவும் அறிவார்ந்த மனு. இதனையும் பிரித்தானியா கவனத்தில் எடுக்கவில்லை. இறுதியாக 15.01. 1946 இல் லேபர் கட்சியின் பிரதமர் அட்லி அவர்களுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் அனுப்பிய மனுவில் லேபர் கட்சி உலகில் சிறுதேச இனங்களின் தன்னாட்சி உரிமைக்கு மதிப்பளித்து அவர்களுக்கான அரசியலமைப்புக்கள் அமைய உதவி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டி ஈழத்தமிழர்களும் சிறுதேச இனம் என்ற வகையில் அவர்களின் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்த உதவுமாறு கேட்டிருந்தார்.

இவைகளை எல்லாம் கவனத்தில் எடுக்காது லேபர் கட்சி ஆட்சியில்தான் 04.02.1948இல் சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்ற ஒற்றையாட்சிக்குள் ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் ஒடுக்கப்பட்டு22.05. 1972 வரையான ஆட்சி முறைமைக்குள் ஈழத்தமிழர்கள் வாழ்ந்து பின்னர் அதனையும் மீறிய சிறிலங்காவின் செயலால் அரசற்ற தேசஇனமாக இன்று வரை இனஅழிப்பு வழியான இனங்காணக்கூடிய அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

எவ்வாறு பிரித்தானியாவின் ஈழத்தமிழர்கள் குறித்த அக்கறையற்ற போக்கு வரலாற்றில் அவர்களை இனஅழிப்பு அச்ச வாழ்வுக்கு உள்ளாக்கியுள்ளது என்பதனை பிரித்தானிய மக்களுக்கும் உலக மக்களுக்கும் தெளிவுபடுத்துவதை முதல் நோக்காக இனிவரும் மாதங்களில் முன்னெடுப்பது இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர்களுக்கான உலக மக்களின் கவனத்தை வேகப்படுத்தும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது. இதனை செய்வதற்கு முயலுவோம் தொடர்ந்து எவ்வாறு சமகாலத்தில் அனைத்துலக நாடுகளை அந்த அந்த நாட்டின் மக்கள் துணையுடன் அணுகலாமெனச் சிந்திப்போம்.

**ஆசிரியர்**

கட்டுரை



# அநுரவின் மறதியும் அபேசிங்கவின் உறுதியும்

**விதுரன்**

இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பது, நாட்டின் நிலையான அபிவிருத்திக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இன்றியமையாததாகும் என்று ‘வளமான நாடு; அழகான வாழ்க்கை’ என்ற தலைப்பிலான தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது,

குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தை தற்போதைக்கு யாரும் மறப்பதற்கு வாய்ப்புக்கள் மிகக்குறைவு. ஏனென்றால் ஆட்சியில் அமர்ந்துள்ள ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுமார் ஒருவருடத்துக்கு முன்னதாக மேடை மேடையாக ஓங்கியொலித்த விஞ்ஞாபனம்.



இத்தகையதொரு பின்புலத்தில், தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் கலாநிதி நிஹால் அபேசிங்க, 2015-2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவு மீளக்கொண்டு வரப்பட்டு, அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்த முன்மொழிவுகள் ஆராயப்பட்டு வருவதாக சுவிஸ்லாந்தில் அண்மையில் இடம் பெற்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான செயலமர்வில் கலந்து கொண்டிருந்தபோது தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு, அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதை நோக்கி நகர்கிறது என்ற தோற்றப்பாட்டைக் கொடுத்தாலும், தமிழ் மக்களின் அபிலாசைகளை புறந்தள்ளும் வகையில் அரசாங்கம் செயற்பட முனைகின்றது என்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் கருத்துக்கள் நிராகரிக்கப்படுவது ஆரோக்கியமானதல்ல என்ற விவாதத்தை உடனடியாக ஏற்படுத்தியுள்ளது.

சுவிட்சலாந்தில் இடம்பெற்ற இலங்கை - சுவிட்சலாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலமர்வில், இனப்பிரச்சினை மற்றும் அரசியல் தீர்வு குறித்து தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் கலாநிதி நிஹால் அபேசிங்க விளக்கமளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தமது அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியிருப்பதாகவும், அதனடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டது, ஆளும் தரப்பின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது.

எனினும், இச்செயலமர்வில் எதிரணிகளில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் பங்கேற்ற அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த வாதத்தை முழுமையாக நிராகரித்தார்.

தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆணை வழங்கினார்கள் என்ற வாதம், தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசத் தேவையில்லை என்ற தொனியைக் கொண்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

யதார்த்தம் வேறு என்பதை விளக்கிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 19 ஆகும். அவர்களில் 8 பேர் மட்டுமே தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார்.

எஞ்சிய 11 பேரும் எதிரணியில் உள்ள, சமஸ்டியை வலியுறுத்தும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்றும், இதனால் அறுதிப் பெரும்பான்மை ஆளும் தரப்பு வசமில்லை என்றும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார்.

மேலும், 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவைக் கொண்டுவருவதற்கான ஆணை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அவர் மறுதலித்தார். இந்த முரண்பாடுகள், புதிய அரசியலமைப்புச் செயற்பாடு அவசர கதியில், அல்லது உண்மையான தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளின் பங்களிப்பின்றி முன்னெடுக்கப்படுவதை அம்பலமாக்கியுள்ளது.

எந்தவொரு அரசியல் தீர்வும் நீடித்ததாகவும், அனைத்து சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருக்க வேண்டுமானால், அனைத்துத் தரப்பினருடனும், குறிப்பாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடன் வெளிப்படையான, நேர்மையான உரையாடல் அத்தியாவசியமாகும்.

அரசியலமைப்பு என்பது ஒட்டுமொத்த தேசத்தின் ஆவணமாகும்; அதுவொரு தரப்பின் விருப்புக்கு மட்டும் அமையாமல், அனைத்துமக்களினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் நிஹால் அபேசிங்க கூறுவது போன்று அரசியலமைப்பு உருவாக்கப்பணிகள் முன்னெடுக்கப்படுவதை யாரும் அறிந்திருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய போது, உலகளாவிய வறுமை ஒழிப்பு, ஊழலுக்கு எதிரான போராட்டம், போதைப் பொருள் ஒழிப்பு, காஸா போர் நிறுத்தம் மற்றும் எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாப்பான உலகை உருவாக்குதல் போன்ற சர்வதேச பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

ஆயினும், இலங்கையின் மிக முக்கியமான உள்நாட்டுப் பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவர் சர்வதேச அரங்கொன்றில் ஒருவார்த்தையேனும் வெளிப்படுத்தாதிருந்தமையானது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் கொடுத்துப் பேசவேண்டிய நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை ஐ.நா. சபையில் தவிர்த்திருந்த அவர், பின்னர் ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் சென்றபோது, அங்கு வசிக்கும் இலங்கை சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுகையில், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நீண்ட விளக்கமளித்துள்ளார்.

குறிப்பாக, அவர் ஆற்றிய உரையில், வடக்கு மாகாணமே யுத்தத்தால் மிக மோசமாக அழிவடைந்தது. அந்த மக்கள் கொடுமையாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# காணாமல் ஆக்கப்பட்ட மாகாண சபை தேர்தலும்!

# கண்டுகொள்ளாத இந்திய அரசும்! திண்டாடும் தமிழ்தேசிய கட்சிகளும்!

பா. அரியநேத்திரன்

இந்திய இலங்கை உடன்படிக்கை 1987ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதன் நோக்கம் வடகிழக்கு தமிழ் பேசும் மக்களுக்காக 13ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் மாகாணசபை நடைமுறைக்கு கொண்டுவருவதற்காகவே. அது 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் இது 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆந் திகதியிடப்பட்டது.



இதற்காக தேர்தல் முதல் முறையாக 1988 ஏப்ரல்04ல் இணைந்த வடகிழக்கில் நடைபெற்றது. 2006,அக்டோபர் 16 ல் இணைந்த வடகிழக்கை ஜே.வி.கட்சி தற்போதைய திசைகாட்டி கட்சி நீதிமன்றத்தை நாடி சட்டரீதியாக பிரித்தது. பிரிந்த கிழக்கு மாகாணத்திற்காக தேர்தல் 2008 மே10 ல் நடைபெற்றது.

அதன்பின்னர் கிழக்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம் வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய தேர்தல்கள் 2012 செப்டம்பர் 08லும் வட மாகாணம்,வடமேற்கு மாகாணம் மேற்கு மாகாணத்திற்காக தேர்தல்2013, செப்டம்பர் 21லும் , தென் மாகாணம் தேர்தல் 2014 மார்ச் 29லும் ஊவாமாகாண தேர்தல் 2014 செப்டம்பர் 20லும் நடைபெற்றது.

கடந்த 11 வருடங்களாக இலங்கையில் எந்த மாகாணசபை தேர்தல்களும் நடைபெறவில்லை. 08 வருடங்களாக இலங்கையில் மாகாணசபை தேர்தல் இல்லாத நிலை இழுபறி தொடர்கிறது. இதுவும் ஒரு ஜனநாயக விரோதமான செயலாக பார்க்கப்படுகிறது.

தமிழ்த்தேசிய கட்சிகளை பொறுத்தவரை 2021 மார்ச் 13 ல் முன்பிருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தமிழர் தரப்பிலுள்ள பல்வேறு கட்சிகளின் பிரதிகளையும் யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதில் கூட்டமைப்பு சார்பில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகிய சகல தமிழ்தேசிய கட்சிகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டு அதிகாரப்பகிர்வு மாகாணசபை தேர்தல் தொடர்பாகவும் வலியுறுத்தினர்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கு இலங்கையை விட்டு சென்ற பின்னர் இலங்கைக்கான புதிய இந்திய தூதுவராக கடமைகளைப் பொறுப்பேற்ற சந்தோஷ் ஜாவுக்கும் தமிழ் தேசிய கட்சிகளுக்கும் இடையில் சந்திப்பு 2024,ஜனவரி, 22 ல் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் இல்லத்தில் நடைபெற்றது.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சிறீதரன், சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், சாணக்கியன் , சார்ள்ஸ் நிர்மலநாதன், விநோ நோகராதலிங்கம், மற்றும் மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு தமிழர் பகுதியில் தொடரும் திட்டமிட்ட பௌத்த ஆக்கிரமிப்பு, மாகாண சபை தேர்தல் நடத்தப்படாமை, அதிகாரம் பகிரப்படாமை, போன்ற விடயங்கள் குறித்து பேசினர்.

2024 நவம்பர் 14 ல் பாராளுமன்ற தேர்தல் முடிந்த கையோடு சரியாக ஏழு தினங்களில் ஓட்டம் ஓட்டமாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப் பேரும் முதல் தரிசனமாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்தது தான் அந்த சந்திப்பு (21/11/2024) வியாழக்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் நடைபெற்றது. அதில் பாரளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், ஸ்ரீநேசன், ஸ்ரீநாத், சாணாக்கியன், கோடீஷ்வரன், குகதாசன், ரவிகரன், சத்தியலிங்கம் ஆகியோர் இந்தியதூதுவரை சந்தித்து அரசியல் தீர்வு விடயங்களையும், மாகாணசபை தேர்தலை உடனே நடத்துவதற்கு இலங்கை அரசை அழுத்தம் கொடுக்குமாறும் கேட்டனர்.




2025 ஏப்ரல் 05 ல் இலங்கைக்கு வருகைதந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் தமிழ் தேசிய கட்சி பிரமுகர்களான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சி.வி.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன்,சாணக்கியன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் பங்கேற்று அதிலும் மாகாணசபை தேர்தல் விடயமும் பேசினர்.

2025 யூன் 06ல் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் அவர்களை அவரது வீட்டில் தனியாக தமிழரசுகட்சி பதில் செயலாளர் சுமந்திரன் சந்தித்து பல்வேறு விடயங்களில் மாகாணசபை தேர்தல் குறித்தும் உரையாடினார்.

இப்படியான சந்திப்புக்களை நடத்துவதும் ஊடகங்களில் படம்காட்டுவதும் தமிழ்தேசிய கட்சி பிரமுகர்கள் இந்திய அரசுடன் நட்புடன் இருப்பதை மட்டும் காட்டியதே அன்றி அவர்கள் கூறிய விடயங்களை இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. இதுவரை இந்திய அரசு செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே உள்ளது. 13உம் இல்லை மாகாணசபை தேர்தலும் இல்லை.

இதேவேளை அண்மையில் 2025 செப்டம்பர் 18ல் இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற தமிழ் ஊடக நிறுவன பிரதானிகளுடனான சந்திப்பின் போது இந்திய தூதுவர் ஒரு குண்டை தூக்கிப்போட்டுள்ளார். "தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையே ஒருமித்த நிலைப்பாடு இருந்தால் மாத்திரமே மாகாணசபை தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை இந்தியாவினால் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்". என இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தமிழ் தரப்பின்மீதே குற்றம் கூறியுள்ளார்.



மாகாணசபையை வலியுறுத்தும் தமிழ் பேசும் அரசியல் கட்சிகள், சில சந்தர்ப்பங்களில் அந்த மாகாண சபை தேவையில்லையென்றும் தெரிவிக்கும் நிலைப்பாடு இருந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் இவ் விடயத்தில் இந்தியாவினால் ஒருமித்த நிலைப்பாட்டை முன்னெடுத்து இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதில் சிக்கல் நிலை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்தேசிய கட்சிகள் மீது பழியைப்போட்டு தப்பிக்கவே இந்தியா முயற்சிப்பதை அவருடைய கருத்தில் இருந்து அறியக்கூடியதாய் உள்ளது.

தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டில் ஐக்கியம் இல்லாத போதிலும் இந்தியா மாகாண சபை தொடர்பில் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாகவும் தூதுவர் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசுடன் எதைப்பேசியும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் இந்தியாவால் கிடைக்கவில்லை.

ஆனால் தமிழ் அரசியல் கட்சிகளின் மத்தியில் விசேடமாக வடக்கு, கிழக்கில் உள்ள அரசியற்கட்சிகளுக்கிடையில் இதுவிடயத்தில் ஒருமித்த கருத்துப்பாடு இல்லை. இந்த கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து மாகாண சபை தொடர்பில் எழுத்து மூலம் எமக்கு உறுதியான நிலைப்பாட்டை அறியத்தந்தால், இந்தியா பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் என்றும் இந்திய தூதுவர் குறிப்பிட்டார்.

ஊடக பிரதானிகளுடனான சந்திப்பில் இந்திய தூதுவர் கூறிய விடயங்களை உற்று நோக்கினால் மாகாணசபை தேர்தல் நடைபெறாமைக்கான காரணம் தமிழ்கட்சிகளின் ஒற்றுமையீனமே என இலகுவாக பழியைப் போட்டு தப்பிக்கும் கருத்தாக இதனை நோக்கினாலும் 1987ல் இந்திய அரசால் முன்மொழியப்பட்ட இலங்கை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# சர்வதேசத்திடம் நீதி கோரும் பாதிக்கப்பட்ட வடகிழக்கு உறவுகள்

**கிண்ணியான்**






வடகிழக்கு தமிழர் தாயகங்களில் முன் வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு நிரந்தர மான அரசியல் தீர்வின்றிய நிலையில் பின்வாங் கும் நிலை தொடர்கின்றது. குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மஹஜரையும் முன்னிருத்தியும் வலியுறுத்தியும் வருகின்ற நிலையில் நீதி இல்லாமல் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.




வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வலியுறுத்தியபடி: "இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கிறோம், தமிழின அழிப்பு, வலிந்து காணா மல் ஆக்கப்படுதல், போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகிறோம்."

இந்த கோரிக்கையை வலுப்படுத்தும் வகையில், யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதை குழிக்கு அருகில் 25.09.2025 முதல் இடம்பெற்று வந்த தொடர் சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் ஒக்டோபர் 01 வரையும் இடம் பெற்றதுடன் கிழக்கு மாகாணத்தின் திருக்கோவில் பகுதியில் இடம் பெற்றது. இதில் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற மாவட் டங்களை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

வடக்கில் செம்மணி பகுதியில் இறுதி நாளன்று குறித்த உண்ணாவிரதப் போராட்டத்தின் போது நம்பிக்கையிழந்த காணாமல் போன உறவு களை நினைத்து உள்ளகப் பொறி முறையை வலியுறுத்தி தீப் பந்தப் போராட்டத்தையும் முன் னெடுத்த நிலையில் ஐக்கிய நாட்டு இலங்கை தொடர்பான அறிக்கையும் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட விவகாரங்களுக்காக நீதி வேண்டியும் உள்நாட்டு பொறி முறையை நிராகரித்தும், சர்வதேச விசார ணையை வலியுறுத்தியும் செம்மணி மனித புதை குழிக்கு நீதி வேண்டியும் மேலும் குறித்த உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஒக்டோபர் 01 சர்வதேச சிறுவர் தினத்தி லும் இனப்படுகொலை செய்யப்பட்ட சிறுவர் களுக்கான நீதியை நிலை நாட்ட கோரியும் கோசங்களை எழுப்பினர். கிழக்கில் அதே நாளில் கறுப்பு பட்டி அணிந்து சிறுவர் தினத்தை போராட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டா டியுள்ளனர்.

இதன் போது ஐக்கிய நாட்டுக்கு குறித்த மஹஜர் அடங்கிய அறிக்கையொன்றையும் அனு ப்பி வைத்துள்ளனர்.

இது குறித்து வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போன உறவுகளின் திருகோணமலை மாவட்ட சங்க தலைவி செபஸ்டியன் தேவி தெரிவிக்கையில் " எங்கள் உறவுகளுக்காக இந்த நாளில் தொடராக உணவு தவிர்ப்பு போராட்டத்தை கடந்த ஐந்து நாட்களாக முன்னெடுத்தோம். எங்கள் பிள்ளைகளும் யாழ் செம்மணி புதை குழி அகழ்வின் போதான மனித எச்சங்களில் இருப்பார்களா? என்ற சந்தேகம் உள்ளது.சர்வதேசம் தான் நீதியை பெற்றுத்தர வேண்டும் உள்நாட்டு பொறி முறையை நம்ப முடியாது.

சர்வதேச நிபுணர் குழுவின் ஊடாக செம் மணி புதை குழி தொடர்பில் ஆராய வேண்டும். எந்த ஜனாதிபதி வந்தாலும் எங்களுக்கு தீர்வு இல்லை .தொடராக போராடி வருகிறோம். கடந்த கால அரசாங்கம் போன்றே இந்த அரசாங்கமும் உள்ளது. ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்ற நிலையில் நாடு உள்ளது. மே மாதமளவில் ஐ.நாடு மனித உரிமைகள் ஆணையாளர் வடகிழக்குக்கு விஜயம் செய்தார்.செம்மணி மனித புதை குழிக்கு சென்று பார்வையிட்டு மக்கள் போராட்டத்தையும் போராடிய போது வருகின்ற கண்ணீர் துளிகளையும் பார்வையிட்டார் ஆனால் அரசாங்கத்துக்கு ஆதர வான பதிலையும் எங்களுக்கு பாதகமான பதிலை யும் தந்தது மன வேதனையளிக்கிறது.

சர்வதேசத்திடம் 17 வருடங்களாக நீதி கோரி வருகிறோம் சர்வதேசம் நீதியை பெற்றுத் தர வேண்டும். பாதிக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கு நீதி வேண்டும். அரசாங்கம் காலத்தை வீணடித்து செல்கிறது. உள்நாட்டு பொறி முறையை நிராகரிக் கிறோம். சர்வதேசம் எங்களுக்கு நீதியை தர வேண்டும். காணாமல் போன உறவுகளுக்காக எங்கள் பிள்ளைகளுக்கான நீதி கிடைக்க வேண்டும் இதற்காக போராடிப் போராடி வயது செல்கிறது எங்களில் 350க்கும் மேற்பட்ட தாய்மார்கள் இறந்துள்ளார்கள் இனி நாங்களும் இறந்து விடு வோம் என்கின்ற நிலை உள்ளது எனவே தான் இறப்பதற்கு முன்னர் எம் உறவுகளுக்காக நீதியை வலியுறுத்துங்கள் என சர்வதேசத்திடம் கேட்டு நிற்கின்றோம்" என ஆழ்ந்த மன வேதனையுடன் இக் கருத்தினை பதிவு செய்திருந்தார்.

ஐக்கிய நாட்டின் தற்போதைய கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பித்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் சார்பில் வெளி விவகார அமைச்சர் தலைமையிலான குழுவும் அங்கு சென்றுள்ளனர். ஆனால் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் உள்ளகப் பொறி முறை ஊடாக தீர்வை வழங்குவோம் என வெளி விவகார அமைச்சர் அங்கு தெரிவித்திருப்பதை ஒரு போதும் ஏற்க முடியாது என வடகிழக்கு காணாமல் போன உறவுகள் உட்பட பலரும் கருத்துக்களை தெரி வித்து வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட சமூகம் உணவு தவிர்ப்பு போராட்டத்தை வடகிழக்கில் கடந்த வாரம் ஆரம்பித்து முடிவுறுத்தியுள்ளனர்.



இது குறித்து திருகோணமலையை சேர்ந்த மனித உரிமைகள் சிவில் செயற்பாட்டாளர் கோகிலா வதனி தெரிவிக்கையில் " இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் அது தொடர்பான சங்கங்களும் தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் ஆடஸ்ட் 30ல் பாரியளவிலான போராட்டங்களை வடகிழக்கில் முன்னெடுத்து வருகின்றனர்.அந்த நிலையில் தங்களுக்கான நீதி வேண்டி ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தொடர்கின்றது ஆனால் உறவுகளை தேடித் தேடி களைத்துப் போயுள்ளனர். கடந்த கால அரசாங்கம் போன்றே அநுர குமார அரசாங்கமும் நீதியை பெற்றுத் தராதா என பாதிக்கப்பட்ட உறவுகள் நினைக்கின்றனர். மனைவி, பிள்ளைகள் என பல உறவுகளை இழந்து தவிக்கின்றனர்.இந்த நிலையில் ஐக்கிய நாட்டு சபையில் மனித உரிமைகள் தொடர்பான இலங்கை விவகாரம் தொடர்பில் அறிக்கை அவ்வளவு ஆரோக்கியமானதாக தெரிய வில்லை இதனால் இலங்கை அரசாங்கம் மீது நம்பிக்கையிழந்துள்ளனர்" என தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான நம்பிக்கையிழந்த மக்கள் உள்நாட்டு பொறி முறையை எதிர்க்கும் நிலைக்குள் உள்ளனர். எனவே தான் சர்வதேசம் தான் நீதியை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகும்.

• • •

# மலையக பல்கலைக்கழக விவகாரம்

# கண்துடைப்பு நாடகம்

மருதன் ராம்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வரும் பெருந்தோட்ட மலையக மக்களின் வாழ்க்கை நிலை குறித்து அவதானம் செலுத்தும் போது பல்கலைக் கழகங்கள் அவர்களுக்கு இன்னும் மிகத் தொலைவில் உள்ள மைல் கல்லாகவே உள்ளன. தொடர்ச்சியாக மலையக பெருந்தோட்ட மக்களுக்கான சுகாதார வசதிகள், வீட்டு வசதிகள் மற்றும் சம்பள பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது அந்த சமூகத்துக்கான கல்வி தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டி உள்ளது.



'சலனங்கள் இல்லாத நீர் ஒருபோதும் கடலை அடையாது'. அதேபோல, காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றங்களை அடைந்து கொள்ளமுடியாத ஒரு சமூகமும் வளர்ச்சியை அடைய முடியாது. ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின், காலத்திற்குக் காலம் அதில் வளர்ச்சி போக்குடன் கூடிய தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். ஒரு சமூகத்திலிருந்து உருவாகும் தொலைநோக்குள்ள அரசியற் தலைவர்கள், ஆற்றல்மிகு அறிவியலாளர்கள், சிறந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், திறமைமிக்க வியாபார முகாமையாளர்கள், ஆளுமைநிறைந்த நிர்வாகிகள் போன்ற துறைசார் நிபுணர்களே இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றனர்.

சுதந்திரம் பெற்ற காலம் முதல் மிதமான பொருளாதார வளர்ச்சியை கொண்டிருந்த இலங்கை, மனித அபிவிருத்தியில் இன்று ஒரு சிறந்த நிலையை அடைந்துள்ளது என்று கூறலாம். இந்த நிலையை அடைந்து கொள்வதற்கு எமது ஆரம்பகால அரசியற் தலைவர்களும் சமூக முன்னோடிகளும் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளனர். என்பதும், இது போன்று முன்னோக்கி செல்ல முடியாமல் சமூக வளர்ச்சியில் பின்தங்கி நிற்கும் மலையகச் சமூகம் தொடர்பான கரிசனை அதிகமாகவே தேவைப்படுகிறது.

நாட்டின் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில் மலையகச் சமூகமானது சமூக, பொருளாதார, கல்வித்துறைகளில் பின்தங்கியிருப்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். இந்த சமூகத்திற்கு உண்மையான விடிவு ஏற்பட வேண்டுமாயின் இந்தநிலை மாற வேண்டும். கல்வித்துறையில், அதிலும் குறிப்பாக, பல்கலைக்கழக அல்லது மூன்றாம் நிலைக் கல்வியில் துரித முன்னேற்றம் அடைவது இன்றியமையாதது. கடந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக ஆரம்பக்கல்வியிலும், இடை நிலைக் கல்வியிலும் மலையக சமூகம் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆனால், மூன்றாம் நிலைக் கல்வியைப் பொறுத்தவரை, அது இன்னும் அடைய வேண்டியது தூரம் தொலைவிலேயே உள்ளது. 1960 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்விக்கான வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகரித்து வந்துள்ளபோதும், உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வயதுப்பிரிவினரில் ஒரு சிறிய விகிதாசாரத்தினரே இன்றும்கூட, பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்று உயர் கல்வியை பெறக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் கடந்த நான்கு தசாப்தகாலப்பகுதியில் ஏனைய சமூகங்கள் மூன்றாம் நிலைக்கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளன. 1970 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் கல்வியில் மிகவும் பின்தங்கியிருந்த எமது சகோதர முஸ்லிம் சமூகம், சமூக உணர்வுமிக்கதும் தொலைநோக்கு கொண்டதுமான அதன் அரசியற்தலைவர்கள் மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கைகள் காரணமாக, தொடர்ந்து வந்த காலப்பகுதியில் பாடசாலைக் கல்வியில் துரிதமாக முன்னேற்றமடைந்தது.

இன்று அச்சமூகத்தினர் செறிந்து வாழும் ஒருபிரதேசத்தில்அரசபல்கலைக்கழகமொன்றை நிறுவுவதில் வெற்றி கண்டு தமது இளைஞர் யுவதிகளின் உயர்கல்விக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக – கலாசார வளர்ச்சிக்கும் உறுதியானதொரு அடித்தளத்தை அவர்கள் அமைத்து கொண்டுள்ளனர். இதை ஒரு எடுத்துக் காட்டாகக் கொள்வோமாயின், மலையகச்சமூகம் செறிந்து வாழும் மலையகப் பிரதேசத்தில் இதே போன்றதொரு பல்கலைக்கழகத்தை அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர முடியும்.

எனினும் மலையகப் பல்கலைக்கழகப் பிரச்சினை என்பது, ஏறக்குறைய 1.5 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட மலையக சமூகத்தின் நலன் கருதி, அவர்களுக்குத் தனியாக ஒரு தேசியப் பல்கலைக்கழகத்தை அமைப்பது தொடர்பான கோரிக்கையாகும். இந்த கோரிக்கை பல ஆண்டுகளாக பல தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எனினும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இந்த விடயத்தில் பெரிதும் அக்கறை காட்டு வதாக இல்லை. குறிப்பாக மலையக சமூகத் தின் பிரதிநிதிகள் மத்தியில் ஒரு தேசியப் பல்கலைக்கழகம் அமைக்கும் அளவுக்கு அரசியல் ஒற்றுமை அல்லது ஆற்றல் இல்லை என்பதைக் காட்டுகிறது. தங்களின் அரசியல் லாபத்துக்காக இது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் பின்னர் அதனை கிடப்பில் போட்டு விடுகின்றனர்.

மறுபுறம் மலையக மக்கள் உயர் கல்வியைப் பெறுவதற்குப் பல சமூக-பொருளாதாரத் தடைகள் உள்ளன. இது உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் அவர்களை மட்டுப்படுத்துகிறது. அத்துடன் மலையகத்தில் ஒரு தேசிய பல்கலைக்கழகம் இல்லாதது, மலையக மக்கள் தங்கள் சமூக மற்றும் அரசியல் வாழ்க்கைமுறையை மேம்படுத்திக் கொள்வதற்குத் தடையாக அமைகிறது. இது உயர்கல்வியை அடைவதற்கும், சமுதாயத்தில் முன்னேறுவதற்கும் ஒரு தடையாக இருப்பதால், ஒரு பல்கலைக்கழகம் அவசியம் என்பது தவிர்க்க முடியாத தேவையாக உள்ளது.

**அரசியல் கண்துடைப்பு**

மலையக பல்கலைக்கழகத்திற்கான கோரிக்கைகள் தொடர்ந்து வந்த போதிலும் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் அது தொடர்பான கருத்தாடல் அடுத்த கட்டத்தை எட்டி இருந்தது. அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் ஹட்டன் - கொட்டகலை பகுதியில் மலையக தேசிய பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உந்துதலில் அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் இதற்கான பணிகளை முன்னெடுத்திருந்தது. குறிப்பாக அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் ஜீவன் தொண்டமான் போன்ற அரசியல்வாதிகளும் பல சந்தர்ப்பங்களில் கொட்டகலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதுகுறித்து 2020ஆம் ஆண்டு மே மாதம் 28



திகதி அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அப்போதைய அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன 'கொட்டகலை தேசிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும். ஆறுமுகனின் கனவு நனவாகும்' என்று குறிப்பிட்டு இருந்தார். தொடர்ந்து குறித்த ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர், 'மலையகத்தின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதே அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பிரதான நோக்கமாக இருந்தது. நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்ற அவரது கனவை நனவாக்கும் வகையில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி தினத்தில் கொட்டகலை தேசிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும். இன ஒற்றுமையை பலப்படுத்துவதிலும் தொழிலாளர்களின் உரிமைக்காகவும் அவர்களின் குரலாக செயற்பட்ட தலைவராகவே நாம் அமரர் ஆறுமுகன் தொண்டமானை பார்த்தோம். அவரை நீண்டகாலமாக எமக்கு தெரியும். புதிய அரசாங்கத்தில் அவரிடம் இருந்த ஒரே நோக்கம் நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்பதேயாகும்.

ஜனாதிபதியிடம் அவர் இது குறித்து பேசியிருந்தார். என்னிடமும் அவர் இது குறித்து பேசினார். நாம் ஒருமுறை அப்பகுதிக்கு சென்று கொட்டகலை கல்லூரியை தொழில் பயிற்சி கல்லூரியாக தெரிவு செய்தோம். அதன் பின்னர் சந்ததன்ன , அம்பேவலை, கொட்டகலை என மூன்று பிரதேசங்களை தெரிவு செய்து பல்கலைக் கழகங்களை உருவாக்க நாம் தீர்மானம் எடுத்தோம்.

அதற்கான நிதி ஒதுக்கீட்டு அமைச்சரவை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் டென்மார்க்கில் நடத்தப்பட்ட அனைத்துலக ஆசிரியர் பயிற்றுநர் செயலமர்வு

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் பயிற்றுநருக்கான செயலமர்வு செப்ரெம்பர் 26 முதல் 28 வரை டென்மார்க்கின் அஸ்சிங் நகரில் நடைபெற்றது. கனடா, சிங்கப்பூர் உள்ளிட்ட 12 நாடுகளில் இருந்துவருகை தந்த வளவாளர்களும் ஆசிரியர்களும் இச்செயலமர்வில் பங்குபற்றிச் சிறப்பித்திருந்தனர்.

தமிழர் வாழும் நாடுகளில் பல்வேறு கல்விக்கழகங்கள் தாய்மொழிக்கல்வியையும் கல்வி தொடர்பான பல செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றன. ஒரே பாடத்திட்டத்தின் கீழ் தாய்மொழிக்கல்வியை முன்னெடுத்து, வளரும் தலைமுறையை ஒரே தடத்தில் வழிநடத்தும் நோக்குடன் அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை நாடுகள்தோறும் உள்ள கல்விக்கழகங்களை ஒன்றிணைத்து, நூல்கள் உள்ளிட்ட பல்வேறு கற்றல் வளங்களை வழங்கி வருகின்றது.

காலந்தோறும் ஆசிரியர்களுக்காகச் செயலமர்வுகளை நடத்தி, கற்பித்தல் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாண்டுக் கான செயலமர்வு டென்மார்க்கில் நடைபெற்றிருந்தது. காலத்தின் தேவைக்கேற்ப கற்பித்தலில் புதிய உத்திகளையும் அணுகுமுறைகளையும் இணைத்துச்செல்வது அவசியமானது. இச்செயலமர்வின் முதன்மைக் கருப்பொருளாகத் 'தாய்மொழிக்கல்வியில் கற்பித்தல் உத்திகளும் அணுகு முறைகளும்" என்ற தலைப்பு அமைந்தது.

செப்.26-ம் நாள் மாலை தியாக தீபம் திலீபனுடைய நினைவுகளோடு, நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன. திருமதி அருள்நிதி இராதகிருஸ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் இணை இணைப்பாளர் திரு கிருஸ்ணா, அவர்கள் தியாக தீபத்தின் நினைவுப் பேருரை ஆற்றினார்

தொடர்ந்து 27, 28-ம் நாட்களில் பல்வேறு தலைப்புகளில் வளவாளர் பலரும் கற்பித்தல் தொடர்பான சிறப்பான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவரும் இணைப்பேராசிரி யருமான முனைவர் சீதா லட்சுமி அவர்கள் கற்பித்தல் உத்திகள், அணுகுமுறைகள் குறித்துச் சிறந்த கருத்துகளை வழங்கினார்.

கொழுப்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் திரு பௌநந்தி அமிர்தலிங்கம் அவர்களும் கற்பித்தல் உத்திகள் பற்றியும் உளவளக் குறைபாடு கொண்ட மாணவரைப் புரிந்துகொள்ளுதலும் கையாளுதலும் என்ற விடயம் தொடர்பிலும் பயன்மிக்க பல கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

ரொறண்ரோ பல்கலைக்கழக விரிவுரையாளரும் அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வளமாளருமான பொன்னையா விவேகானந்தன் புதிய கற்பித்தல் உத்திகள் வாயிலாக எவ்வாறு விளையாட்டுகள் வழியே கற்பிக்கலாம் என்பது பற்றி விளக்கமுறக் கூறினார்.

டென்மார்க் தமிழர்களிடையே நன்கு அறியப்பட்ட உளவள வல்லுநரான திரு கதிர் காமநாதன் அவர்கள் மாணவர் உளவியலைப் புரிந்துகொண்டு வகுப்புகளை எவ்வாறு சிறப்பாக நடத்தலாம் என்பது பற்றிக் குழந்தைகளின் உளவியல், பதின்மவயதினர் உளவியல், கற்பித்தல் உளவியல் என்ற தலைப்புகளில் சிறந்த விளக்கங்களை வழங்கினார்.

சுவிஸ் கல்விச்சேவை நிறுவனத்தின் பொறுப்பாளரான முனைவர் கந்தசாமி பார்த்திபன் அவர்கள், தமிழ்மொழி வரலாறு, ஈழத் தமிழர் வரலாறு என்பவை தொடர்பான கற்பித்தலை எவ்வாறு சிறப்புற மேற்கொள்ளலாம்? என்பது பற்றி தெளிவான விளக்கங்களை வழங்கினார்.

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அலுவலகச் செயற்பாட்டாளரான திருமதி சாந்தினி கதிரேசு, சமகாலத்தில் நோர்வே நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும் கற்பித்தல் முறைகள் பற்றிய விளக்கங்களை வழங்கினார்.

சுவிற்சர்லாந்து நாட்டில் பயன்படுத்தப் படும் கற்பித்தல் உத்திகள் பற்றி, அந்நாட்டு தமிழ் ஆசிரியர் குழுவினரும் டென்மார்க் நாட்டின் தமிழ் வகுப்புகளில் கையாளப்படும் கற்பித்தல் முறைகள் குறித்து, டென்மார்க் ஆசிரியர் குழுவினரும் செய்முறை வழியாகவும் சிறப்பான விளக்கங்களை அளித்தனர்.

அனைத்துலகத் தொடர்பகம் சார்பில் முதன்மை இணைப்பாளர்திரு பொன்மகேஸ்வரன் அவர்களும் தன்னுரையில், செயலமர்வுகளில் இனவிருப்பு, இனப்பற்று போன்ற தலைப்புகளும் உள்ளடக்கப்படவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து வளவாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பங்காளர்களுக்கும் சான்றிதழ்களும் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

செப்.28 அன்று மாலை செயலமர்வு இனிதே நிறைவுபெற்றது.

டென்மார்க் நாட்டின் மாலதி தமிழ்க் கலைக் கூட நிர்வாகிகளும் தன்னார்வத் தொண்டர்களும் செயலமர்வு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## பிள்ளையான் நேர ... தொடர்ச்சி ...

கொள்ளலாம்.

பிள்ளையான் நேரடித்தொடர்பு என அழுத்தமாக கூறியதால் ஒரு சிறைக்கைதி மட்டக்களப்பு சிறைச் சாலையில் சந்தேக கைதியாக இருந்து நேரடியாக சம்மந்தப்பட்டார். அப்படியானால் சிறைக்குள் இருந்து வெளியில் சென்று திட்டங்களை தீட்டினாரா?

அல்லது சிறைக்குள் இருந்து சம்மந்தப்பட்டவர்களை சிறைக்குள் வரவழைத்து திட்டங்களை வழிப்படுத்தினாரா? நேரடித்தொடர்பு பிள்ளையான் எனில் பக்க தொடர்புகள் யார்? இந்த தற்கொலை தாக்குதலால் யார் நன்மை அடைந்தார்? பிள்ளையானை நேரடித்தொடர்புக்கு பயன்படுத்திய அந்த பெரும்புள்ளி யார்?

இதில் அரசியல்வாதிகள், அதிகாரிகள், படைத்தரப்புகள் தொடர்பில்லாமல் தனி ஒரு மனிதன் அதுவும் சிறைச்சாலையில் இருந்து நேரடியாக தொடர்புபட்டார் என்பதை நம்புவதற்கு மக்கள் முட்டாள்கள் இல்லை ஏனைய சூத்திரதாரிகளையும், அவருக்கு இதனை செய்யுமாறு கட்டளையிட்டவர்யார் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசு வெளிச்சத்திற்கு கொண்டு வரவேண்டும்.பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உடனே அந்த நபர்களையும் கைது செய்ய வேண்டும் சந்தேக நபர்களுடைய பெயர்களை வெளியிடவேண்டும் என்பதே எல் லோருடைய எதிர்பார்ப்பு

மட்டக்களப்பு சிறையில் இவ்வாறான ஒரு கொலைச்சதிகளில் பிள்ளையான் நேரடியாக தொடர்புகளை பேண சிறைச்சாலை அதிகாரிகள் இடம்கொடுத்தனரா? சிறைச்சாலை என்ன உணவு விடுதியா? இப்படியான பல கேள்விகளுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால பதில் சொல்லியே ஆகவேண்டும்.

வெறுமனமே பிள்ளையான் நேரடித் தொடர்பு என மட்டும் கூறுவதால் ஈஷ்டர் குண்டு தாக்குதலை கண்டு பிடித்ததாக கூற முடியாது.

பிள்ளையான் இந்த தாக்குதலுக்கு தொடர்பாக இருந்ததை பிள்ளையானுடைய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் நெருக்கமாவும் அந்த கட்சியின் ஊடக செயலாளராகவும் இருந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சாட்சியம் வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் ஊடகச் செயலாளரான அசாத் மௌலானாவை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கும் அசாத்மௌலானா பகிரங்கமாகவே தொடர்ச்சியாக கடந்த நான்கு வருடங்களாக கூறிவந்தார்.

அவரை இலங்கைக்கு அழைத்துவந்து சாட்சியங்களை பெறுவதாக பலதடவைகள் செய்திகள் வந்தன.

ஆனால் அவரை அழைத்துவந்து விசாரித்ததாக இது வரை எந்த தகவல்களும் வெளிவராத நிலையில் தற்போது உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நேரடித்தொடர்பு பிள்ளையான் என்பதை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுப்படுத்தியுள்ளார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மட்டும்தான் பிள்ளையான் நேரடித் தொடர்பாக இருந்ததாரா?

ஏனைய கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டமை, மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம், மாமனிதர் ரவிராஜ், மாமனிதர் சந்திரநேரு, தமிழர் புனர்வாழ்வுக்கழக பிறேமினி உட்பட ஆறுபேர், இதுபோன்ற பல கொலைகளுக்கு இவர் நேரடித்தொடர்பு, பக்க தொடர்புகள் பற்றியும் வெளிக்கொணர்வதும் தற்போதைய அரசின் கடமை.

## பயங்கரவாதத்... தொடர்ச்சி ...

இவ்வாறான மக்கள் எழுச்சி களை ஒடுக்குவதாக இருந்தால் ஆளுங்கட்சிக்கு அடக்கு முறையென்பது அவசியம். அதனால் தான் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் பாரதூரமான சட்டத்தை கொண்டுவர முற்படுகின்றனர்." எனவும் சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டார்.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சி மௌனம் காக்கின்றது. எல்லை நிர்ணய விவகாரத்தைக் காண்பித்து இழுத்தடிப்பு இடம்பெறுகின்றது எனவும், கிரிக்கெட் மைதானத்தை அமைத்து வடக்கு மக்களை ஏமாற்ற முடியாது. " – என ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டார்.




# அமெரிக்க அரசின் முடக்கம் பாதிப்புகள் என்ன?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்காவின் குடியரசுக்கட்சி கொண்டு வந்த நிதி மசோதா மற்றும் குடியரசுக் கட்சி நடவடிக்கை இரண்டையும் ஜனநாயகக் கட்சி நிராகரித்து, செனட் ஒரு உடன்பாட்டை எட்டத் தவறியதை அடுத்து, அமெரிக்க அரசாங்க முடக்கம் அதிகாரப்பூர்வமாக கடந்த புதன்கிழமை(1) தொடங்கியது. இந்த முடக்கம் மில்லியன் கணக்கான கூட்டாட்சி ஊழியர்களைப் பாதிக்கும் மற்றும் சேவைகளை சீர்குலைக்கக்கூடும் என்று NBC செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.




அரசாங்கத்தை தற்காலிகமாக இயங்க வைக்கும் ஒரு குறுகிய கால செலவு மசோதாவை நிறைவேற்ற அமெரிக்க செனட் தவறிய சில மணி நேரங்களுக்குப் பிறகு, முடக்கம் தொடங்கியது. செனட் குடியரசுக் கட்சியினரால் முன்மொழியப்பட்ட தொடர்ச்சியான தீர்மானம் ஜனநாயகக் கட்சியினரால் தடுக்கப்பட்டது, அது நிறைவேற்றத் தேவையான 60 வாக்குகளுக்குக் குறைவாகவே வாக்குகள் இருந்தது.

சமீபத்திய பேச்சுவார்த்தைகளில், சுகாதாரப் பாதுகாப்பு சலுகைகள் இரு கட்சிகளுக்கும் இடையிலான முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாகும். இந்த ஆண்டு இறுதியில் காலாவதியாகவுள்ள மலிவு பராமரிப்புச் சட்டத்திற்கான மேம்படுத்தப்பட்ட மானியங்களை நீட்டிப்பது, அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோர் உட்பட சட்டப்பூர்வமாக இருக்கும் சில குடியேறிகளுக்கு சட்டத்தின் கவரேஜ் தகுதியை மீட்டெடுப்பது உள்ளிட்ட வலுவான சுகாதாரப் பராமரிப்பு தொடர்பான சலுகைகளை ஜனநாயகக் கட்சியினர் கோருகின்றனர் என்று அறிக்கை தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 29 அன்று ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், துணைத் தலைவர் ஜே.டி. வான்ஸ் மற்றும் மேலாண்மை மற்றும் பட்ஜெட் அலுவலகத்தின் இயக்குனர் ரஸ்ஸல் வோட் ஆகியோருடன் காங்கிரஸ் தலைவர்களின் கூட்டம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றத் தவறிவிட்டது. செனட் வாக்கெடுப்புக்கு முன்னதாக, இரு கட்சிகளும் தங்கள் நிலைப்பாட்டை இரட்டிப்பாக்கினர்.

சுகாதாரப் பாதுகாப்பு சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது மற்றும் உடனடி நடவடிக்கை தேவை என்ற தங்கள் கருத்துக்களை ஜனநாயகக் கட்சியினர் மீண்டும் மீண்டும் கூறினர்.

பிரதிநிதி ரோசா டெலாரோ, செய்தியாளர்களிடம் கூறுகையில், சாதாரண ஒதுக்கீட்டுச் செயற்பாட்டின் போது சுகாதாரப் பாதுகாப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என்ற குடியரசுக் கட்சியினரின் வார்த்தையை நம்ப மாட்டேன்.

“எந்த நம்பிக்கையும் இல்லை” “மெக்கார்த்தி-பைடன் ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்” என்று அவர் மேலும் கூறினார், 2023 இல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட செலவு ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி, அது சட்டமாக நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் மறுபுறம், குடியரசுக் கட்சியினர் இந்த நடவடிக்கைகளை எதிர்க்கின்றனர், செவ்வாய்க் கிழமைக்கு முன், குடியரசுக் கட்சியினரும் ஜனநாயகக் கட்சியினரும் தொடர்ந்து ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினர்,

ஜனநாயகக் கட்சியினரின் திட்டம் செலவினங்களில் $1.5 டிரில்லியன் சேர்க்கும் என்றும், இது விவாதங்களுக்கு ஒரு தீவிரமற்ற தொடக்கப் புள்ளி என்றும் குடியரசுக் கட்சியினர் கூறியுள்ளனர். குடியரசுக் கட்சியினர் காங்கிரஸின் இரு அவைகளையும் கட்டுப்படுத்துகிறார்கள், ஆனால் செனட்டில் செலவு மசோதாவை நிறைவேற்ற தேவையான 60 வாக்குகள் அவர்களிடம் இல்லை. எனவே, இந்த விஷயத்தில் ஜனநாயகக் கட்சியினருக்கு செல்வாக்கு உள்ளது.

மில்லியன் கணக்கான அமெரிக்கர்களுக்கு சுகாதார காப்பீட்டை மலிவானதாக மாற்றும் வரிச் சலுகைகளை நீட்டிக்கவும், டிரம்ப்பால் செய்யப்பட்ட மருத்துவ உதவிக்கான வெட்டுக்களை மாற்றவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஜனநாயகக் கட்சியினரின் தவறால், அரசாங்கம் ஒரு பணிநிறுத்தத்திற்குச் செல்கிறது என்று அமெரிக்காவின் துணைத் அரச தலைவர் JD வான்ஸ் எச்சரித்தார்.


பொருளாதார ஆபத்துகள் வழக்கத்திற்கு மாறாக அதிகமாக உள்ளன. பணிநிறுத்தம் ஏற்பட்டால், கூட்டாட்சி ஊழியர்கள் நிரந்தரமாக பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று வெள்ளை மாளிகை அச்சுறுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை ஏற்கனவே பலவீனமாக இருக்கும் தொழிலாளர் சந்தையை உயர்த்தக்கூடும், மேலும் தற்காலிக மீட்சியைத் தடம் புரளச் செய்யலாம். பல ஆய்வாளர்கள் நம்புவது போல் பொருளாதாரம் மந்தநிலைக்கு அருகில் இருந்தால், அரசாங்கத்தின் கூர்மையான வெட்டுக்கள் அதை விளிம்பிற்கு மேல் தள்ளக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

1976 முதல், அமெரிக்க அரசாங்கம் 20 முறை மூடியுள்ளது. 1995 முதல் 2013 வரை எந்த மூடலும் ஏற்படவில்லை என்றாலும், அதன் பின்னர் 12 ஆண்டுகளில் மூன்று முறை மூடல்கள் ஏற்பட்டுள்ளன.

கடைசியாக நிறுத்தம் டிசம்பர் 22, 2018 முதல் ஜனவரி 25, 2019 வரை நீடித்தது - மொத்தம் 35 நாட்கள், இது நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக மிக நீண்ட அரசாங்க முடக்கமாகும். இதனால் அமெரிக்காவிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் $3 பில்லியன் இழப்பு ஏற்பட்டதாக காங்கிரஸ் பட்ஜெட் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பணிநிறுத்தம் விரைவாக முடிவடைந்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விளைவுகள் கட்டுப்படுத்தப்படலாம். பணிநிறுத்தத்தின் ஒவ்வொரு வாரமும் பாதிக்கப்பட்ட காலாண்டில் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியிலிருந்து 0.2 சதவீத புள்ளியைக் குறைக்க வேண்டும் என்பது பெடரல் ரிசர்வின் கட்டைவிரல் விதி. ஆனால் இழந்த உற்பத்தி பொதுவாக அரசாங்கம் மீண்டும் திறந்தவுடன் மீட்டெடுக்கப்படும், அதாவது அத்தியாயம் ஒரு காலாண்டிற்குள் கட்டுப்படுத்தப்பட்டால் பொருளாதாரத்தின் நீண்டகாலப் பாதை சிறிதளவு மாறாது.

பணிநிறுத்தம் அக்டோபர் 1 ஆம் தேதி தொடங்கி நவம்பர் நடுப்பகுதியில் முடிவடைந்தால், பொருளாதார விளைவின் பெரும்பகுதி ஆண்டு இறுதிக்குள் தலைகீழாக மாறும், இது நான்காம் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை அப்படியே வீழ்த்திவிடும்.




640,000 தொழிலாளர்கள் ஓரங்கட்டப்படலாம் என்று பொருளாதார வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர், இதனால் வேலையின்மை 4.7% ஆக உயர்த்தப்படலாம், இது மிகவும் உயர்வான அதிகரிப்பாகும்.

இதற்கு நேர்மாறாக, பண்ணை அல்லாத ஊதியங்களை அடிப்படையாகக் கொண்ட நிறுவன கணக்கெடுப்பு, அதே இடையூறைப் பதிவு செய்ய வாய்ப்பில்லை, ஏனெனில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் இறுதியில் சம்பளத்தைப் பெற்று சம்பளத்தில் இருப்பார்கள்.

பணிநிறுத்தம் தீர்க்கப்பட்டால், பணிநீக்கம்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்




# ஆசியாக் கோப்பை 2025 போர்க்களமாக மாற்றப்பட்ட கிரிக்கெட் மைதானம்

துபாயில் நடைபெற்ற ஆசியாக் கோப்பை 2025 (2025 Asia Cup) என்ற கிரிக்கெட் போட்டித் தொடர், போர்க்கால முரண்பாடுகளைப் பிரதிபலித்திருக்கிறது. 2024 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ரஷ்யாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதையோ, அல்லது 2022இன் பீவா உலகக் கிண்ணப் போட்டியையோ (FIFA World Cup) இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம். ஆனால் அவையெல்லாம் மூடிய கதவுகளுக்குப் பின்னால், விளையாட்டுத்துறை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளாகும். ஆனால் இம்முறை நடைபெற்ற ஆசியாக் கோப்பைக்கான போட்டித் தொடர் இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே விளையாடப்பட்ட மூன்று போட்டிகளும், இரு நாடுகளுக்கு இடையே நடைபெற்ற போரை ஒத்ததாக இருந்தன: குண்டு வீச்சு விமானங்கள் ஒன்றோடொன்று தாக்கியழிக்கப்படுவதாகக் காண்பிக்கப்பட்ட கைச்சைகைகள், வழமையாக நடைபெறும் கைகுலுக்கல்கள் மறுக்கப்பட்டமை, போட்டி நடுவரை உள்ளடக்கிய மோதல்கள் என்று இரண்டு கிரிக்கெட் சபைகளுக்கிடையேயான ஒரு மோதல் களமாக அந்தப்போட்டிகள் காட்சி தந்தன.

இந்த மோதல்களுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே பல போர்கள் வரலாற்றில் நடைபெற்றிருக்கின்றன. இதன் காரணமாக கிரிக்கெட் ரீதியாக அவர்களுக்கு இடையே இருந்த தொடர்புகள் அந்தப் போர்களினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாகிஸ்தானுடன்தொடர்புடைய ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட 2008 மும்பாய் தாக்குதலுக்குப் பின்னர், ஒரேயொரு இருதரப்புத் தொடர் மட்டுமே இரண்டு நாடுகளினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தொடர் இந்தியாவினால் 2012 இல் முன்னெடுக்கப்பட்டது. இரு நாடுகளையும் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் களத்தில் ஒருவரையொருவர் சந்தித்த பொழுது, மிகவும் பண்பாகவும் நடுநிலைத்தன்மையோடும் நடந்துகொண்டதைக் காண முடிந்தது. அந்த நிலை முற்றாக மாறி, விளையாட்டு வீரர்களும் அரசியல் வாதிகளும் ஒரேமாதிரியான நடத்தையைப் பின்பற்றுவதை இம்முறை காணமுடிந்தது. ஆசியாக் கோப்பை இந்த ஆண்டு விளையாடப்பட்ட முறையைக் கண்ணோக்கும் போது, பல பில்லியன் டொலர்கள் வருமானத்தை அள்ளிக்கொடுக்கும் கிரிக்கெட் விளையாட்டு, இராணுவமயமாக்கப்பட்டிருப்பதை மிகவும் தெளிவாக அவதானிக்க முடிந்தது.

அரசியல் தன்மை வாய்ந்த கருத்துகளைத் தெரிவித்ததற்காக தண்டப்பணம் செலுத்தப்பட்ட பொழுதிலும், பாகிஸ்தானை இந்தியா தோற்கடித்த பின்னர் செப்டெம்பர் 14ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இந்தியாவின் கப்டனான, சூரியகுமார் யாதவ், தமது வெற்றியை பஹல்கம் தாக்குதலில் பலியானவர்களுக்கும் இந்திய இராணுவத்துக்கும் சமர்ப்பணம் செய்தார்.

இறுதிப் போட்டியில் நான்கு ஓவர்களில் 50 ஓட்டங்களை இந்தியா எடுப்பதற்குக் காரணமான பாகிஸ்தானின் விரைவுப் பந்து வீச்சாளரான ஹறிஸ் ராஉவ் கூட விளையாட்டுக்குரிய பண்புகளுக்கு எதிராகவே நடந்துகொண்டார். மே மாதம் நடைபெற்ற போரில் இந்தியாவைச் சேர்ந்த ஆறு போர் விமானங்கள் தாக்கப்பட்டதை செய்து காண்பித்ததற்காக போட்டிக்கான அவரது கட்டணத்தின் 30 வீதத்தை தண்டப்பணமாக அவர் செலுத்தினார். றாவுவ்வின் செய்கை சமூக வலைத் தளங்களில் வைரலாகப் பரவியது.




இதிலே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் யாதவ், ராவுவ் இருவருமே போட்டியில் நன்றாக விளையாடவில்லை. ஆனால் அவர்களது மிகைப்படுத்தப்பட்ட தேசியவாதம் கடும் உணர்வுகளுடன் வெளியே காட்டப்பட்டது. ஒருவேளை இவ்வாறு தான் இன்று எல்லா விடயங்களும் நடைபெறுகின்றன போன்று தோன்றுகின்றது. தற்காலத்தில் விளையாட்டு மைதானத்தில் அவர்கள் காட்டும் திறமையை விட, சமூக வலைத்தளங்களில் இவர்கள் வெளிப்படுத்தும் சாகசங்களே அவர்களது விசிறிகளை அதிகமாகக் கவர்வதை பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

பாகிஸ்தான் வீரர்களுடன் கைகுலுக்குவதற்கு மட்டும் இந்திய வீரர்கள் மறுக்கவில்லை. ஆசியாவின் கிரிக்கெட் சபையின் தலைவராக இருக்கின்ற மொஷின் நக்வியிடமிருந்து (Mohsin Naqvi) வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் அவர்கள் புறக்கணிந்திருந்தார்கள். மொஷின் பாகிஸ்தான் அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருப்பதுடன், தனது நாட்டு கிரிக்கெட் சபைக்கும் தலைமை தாங்குகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு காட்சியை இதற்கு முன்னர் ஒருபோதுமே நாங்கள் பார்த்ததில்லை. வெற்றியடைந்த குழுவினர் வெறுங்கையாகத் தமது வெற்றியைக் கொண்டாடிக்கொண்டிருந்தனர். ஏனென்றால் நக்வியிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள இந்தியக் குழுவினர் மறுத்த பொழுது, வெள்ளியிலான அந்தக் கிண்ணம் ஆசிய

தமிழில்: ஜெயந்திரன்

கிரிக்கெட் சபையினரால் அப்புறப்படுத்தப்பட்டது. "நிலைமை கேலிக்கூத்தாக மாறிவிட்டதாக" முன்னர் இந்தியாவுக்காக விளையாடியவரும் தற்போது கிரிக்கெட் வர்ணனைசெய்பவருமாக விளங்குகின்ற ரவி ஷாஸ்திரி கருத்துத் தெரிவித்தார். "முழுவிளையாட்டுத் தொடருமே தேசியவாதத்துக்குப் பலியாகியிருக்கிறது" என்று தெரிவித்த ஷாஸ்திரி, விளையாட்டு, மோதல்களில் ஈடுபடுபவர்கள் நடுவே உரையாடலை ஊக்குவிக்க வேண்டுமேயொழிய மேலும் பிரிவினைகளை உருவாக்கக்கூடாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுக்கும் போரை முன்னெடுக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையேயான தெளிவான வேறுபாடு மழுங்கடிக்கப்பட்டு, நாகரீகமான மனிதர்கள் விளையாடும் விளையாட்டான கிரிக்கெட்டின் மாண்பு இங்கே மாசுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்தில் மேற்கொண்ட பதிவில், இந்தியாவின் விளையாட்டை "சிந்தூர் தாக்குதல்" எனக்குறிப்பிட்டிருந்தார். "ஒரு மிக மோசமான மோதலை ஒரு கிரிக்கெட் போட்டிக்குப் பிரதமர் ஒப்பீடு செய்திருக்கிறார்" என்று இந்தியாவின் முன்னணி ஊடகவியலாளரான சுஹாசினி ஹய்டார் சுட்டிக்காட்டினார். பிரதமர் மேற்கொண்ட பதிவும் அதனைத் தொடர்ந்து வந்து ஆய்வும், எவ்வாறு ஒரு போர்க்களமாக இந்தக் கிரிக்கெட் தொடரைக் காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பதை மிகவும் தெளிவாகக் காட்டுகிறது.

பல உயிர்களைக் காவுகொண்டு, பல்லாயிரம் குடும்பங்களுக்குத் தாங்கொணாத் துயரத்தைக் தந்து, பாரிய பொருண்மிய இழப்புகளை ஏற்படுத்திய ஒரு இராணுவத் தாக்குதலை ஒரு விளையாட்டுடன் ஒப்பிடுவது எவ்வளவு மடமை என்பதை இதன் மூலம் அறிய முடிகின் றது.

இங்கே இன்னும் பிரச்சினைக்குரிய விடயம் என்னவென்றால், விளையாட்டின் பொழுது வெளிப்பட்ட வெளிவேடத்தன்மை ஆகும். அரசியல் பிரச்சினைகளையும் பாதுகாப்பு அச்சுறுத்தலகளையும் காரணங்காட்டி, இந்தியாவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் பாகிஸ்தானுடன் இருதரப்பு கிரிக்கெட் போட்டிகளை முன்னெடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தது. ஆனால் ஆபத்து அதிகமாக இருக்கும் பொழு தும் கூட நிதியளிப்பவர்கள் பல மில்லியன் டொலர்களைக் கொடுக்க முன்வரும் வேளையில், இந்தியாவும் பாகிஸ்தானும் பல பல பல்தரப்புப் போட்டிகளை நடத்த முன்வருகிறார்கள். இந்தியப் பொதுமக்கள் கூட தங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொண்டனர். முதலாவது போட்டியில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்க அரசின்.. . தொடர்ச்சி ...

செய்யப்பட்ட தொழிலாளர்கள் திரும்ப அழைக்கப்படுவதால் வேலையின்மை விகிதம் அதன் முந்தைய நிலைக்குத் திரும்பும். ஆனால் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பணிநீக்கங்களை நிரந்தரமாக்குவதாக அச்சுறுத்தினால், வேலையின்மை விகிதம் பல மாதங்களுக்கு 4.5% க்கும் அதிகமாக இருக்கக்கூடும்.

உதாரணமாக, சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை அதன் ஊழியர்களில் சுமார் 32,460 பேரை பணிநீக்கம் செய்யத் தயாராகி வருகிறது, இது பொது சுகாதார நடவடிக்கைகள், ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வையை சீர்குலைக்கிறது. நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் சுமார் 64% பேரை பணிநீக்கம் செய்யும், மேலும் தேசிய சுகாதார நிறுவனங்கள் சுமார் 75% பேரை பணிநீக்கம் செய்யும். மருத்துவக் காப்பீடு, மருத்து வ உதவி மற்றும் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்து பாதுகாப்பு செயற்பாடுகள் போன்ற முக்கியமான திட்டங்கள் பகுதியளவு செயற்படலாம், இருப்பினும் அவற்றின் திறன் பாதிக்கப்படலாம்.

விமானப் போக்குவரத்துத் துறையில், விளைவு உடனடியாக இருக்கலாம். விமானப் போக்குவரத்தில் தாமதங்கள், ரத்துசெய்தல்கள் மற்றும் செயல்பாட்டு இடையூறு ஆகியவற்றுடன் இது தொடர்புடையது. ஒரு வாரத்திற்கு அதன் இழப்பு வாராந்தம் 1 பில்லியன் டாலர் வரை இருக்கும் என்று அமெரிக்க பயணச் சங்கம் எச்சரிக்கிறது.

பெருமளவிலான பணிநீக்கங்கள் ஏற்பட்டாலோ அல்லது முட்டுக்கட்டை நீடித்தாலோ, தொழிலாளர் சந்தை மற்றும் பொருளாதாரம் நீடித்த சேதத்தை எதிர்கொள்ள நேரிடும். இப்போதைக்கு, மிகப்பெரிய உடனடி ஆபத்து கொள்கை வகுப்பாளர்களுக்கே இருக்கலாம், அவர்கள் மிக முக்கியமான அளவீடுகள் இல்லாமல் பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்த பணிநிறுத்தத்தின் காலம் கணிக்க முடியாதது, இது சமூகம் முழுவதும் பரவலான தாக்கங்களை ஏற்படுத்துகிறது, கூட்டாட்சி ஊழியர்கள் நீண்டகால ஊதியம் பெறாத ஊதியத்தை எதிர்கொள்ள நேரிடும், இது சமூக உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்று நிபுணர் குறிப்பிட்டார்.

இந்த பணிநிறுத்தம் இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான மோதலையும் பிளவையும் பிரதிபலிக்கிறது, மேலும் அதன் தீர்வுக்கு கணிசமான நேரம் ஆகலாம்.

• • •

## 500 பில்லியன்... தொடர்ச்சி ...

டெஸ்லாவுடன், செயற்கை நுண்ணறிவு ஸ்டார்ட்அப் xAI மற்றும் ராக்கெட் நிறுவனமான SpaceX உள்ளிட்ட அவரது பிற முயற்சிகளின் மதிப்பீடுகளும் சமீபத்திய மாதங்களில் உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஃபோர்ப்ஸின் பில்லியனர்கள் குறியீட்டின்படி, Oracle நிறுவனர் லாரி எலிசன் உலகின் இரண்டாவது பணக்காரர் ஆவார், சுமார் $350.7 பில்லியன் சொத்து மதிப்பு அவரிடம் உள்ளது.

அமெரிக்க அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கும் வேலைகளைக் குறைப்பதற்கும் பொறுப்பான அமைப்பான டிரம்ப் நிர்வாகத்தின் அரசாங்க செயல்திறன் துறையுடன் (DOGE) அவர் பணியாற்றியதற்காக இந்த ஆண்டின் தொடக்கத்தில் அவர் விமர்சனங்களை எதிர்கொண்டிருந்தார்.

X சமூக ஊடக தளத்தையும் வைத்திருக்கும் மஸ்க், குடியேற்றம் மற்றும் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம், திட்டங்கள் போன்ற பிரச்சினைகள் குறித்த தனது கருத்துக்களைப் பற்றி குரல் கொடுத்து வருகிறார்.

அடுத்த தசாப்தத்தில் லட்சிய இலக்குகளின் பட்டியலை அடைந்தால், மஸ்க் $1 டிரில்லியன் மதிப்புள்ள சம்பளப் பொதியைப் பெற முடியும் என்றும் நிறுவனத்தின் இயக்குநர் குழு தெரிவித்துள்ளது.

## இனப்படுகொலை ... தொடர்ச்சி ...

கட்டாயமாக காணாமல் போதல்கள், சித்திரவதை மற்றும் அடிப் படை உரிமை களை நசுக்குதல் ஆகியவற்றால் அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டியதுடன். காணாமல் போன அன்புக்குரியவர்கள் பற்றிய பதில்களுக்காக இன்னும் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான குடும் பங்களின் அவலநிலை மற்றும் உயிர் பிழைத்தவர்கள் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் ஆகியவற்றை அவர்கள் விரிவாக கூறினர்.

அனைத்து தமிழ் அகதிகளுக்கும் நிரந்தர பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசரத் தேவைக்கான குறித்த காத்திரமான வாதத்தையும் அவர்கள் முன்வைத்தனர். அதனால் அவர்கள் மீண்டும் துன்புறுத்தல் அல்லது வன்முறைக்கு தள்ளப்படுவார்கள் என்ற அச்சத்திலிருந்து விடுபட்டு கண்ணியத்துடனும் பாதுகாப்புடனும் வாழ முடியும்.

இந்த சந்திப்பும் மற்றும் கலந்துரையாடலும் ஆஸ்திரேலிய அரசியல் தலைவர்களிடையே தமிழ் சமூகத்தின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனிதாபிமான கோரிக்கைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதில் ஒரு முக்கியமான படியைக் குறிக்கிறது.

## காணாமல் ஆக்க . .. தொடர்ச்சி ...

இந்திய ஒப்பந்தம் மாகாணசபை முறைமையை மாகாணசபை தேர்தலை 2025 லும் அவர்களால் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல் தட்டிக் கழித்து நொண்டிச்சாட்டுகளை கூறுவதையே காண முடிகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் வகையிலேயே இந்த 13வது திருத்தம் அமைக்கப்பட்டுள்ளது.ஆனால் அது ஏனைய ஏழு மாகாணசபைகளுக்குமாக மொத்தம் 09, மாகாணசபைகளும் அதிகாரப்பகிர்வை பெற்றதால் வடகிழக்கு மாகாணசபைக்கான அதிகாரப் பகிர்வு காணி பொலிஷ் அதிகாரங்கள் தொடர் பான தேவை ஏனைய மாகாணசபைகள் எதிர்பார்க்கவில்லை என்பதே உண்மை.

• • • வடகிழக்கைபொறுத்தவரைமாகாணசபை முறைமையில் போதிய அதிகாரங்கள் இல்லை எனினும் அது ஒரு அரசியல் தீர்வுக்கான ஆரம்ப புள்ளி என்பதால் அதனை நிராகரிக்க முடியாத நிலை தமிழ்த்தரப்புக்கு உண்டு என்பதால் மாகாணசபை தேர்தலையும் நிராகரிக்க முடியாது.

இந்தியா இழைத்த தவறு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை வடகிழக்கிற்கு மட்டும் நடைமுறை படுத்த இலங்கை அரசை வலியுறுத்தியிருக்கவேண்டும் வடகிழக்கிற்கு அப்பால் இலங்கை முழுவதும் 09, மாகாணசபைக்கும் இதனை நடைமுறை படுத்தவிட்டது வட கிழக்கின் தனித்துவமும் இல்லாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணமே.

2009 மே 18 க்கு முந்திய நிலை வேறு 2009 மே18 க்கு பிந்திய நிலை வேறு தற்போது 16 வருடங்கள் கடந்துள்ளது தமிழ்த்தேசிய கட்சிகளும் தலைவர்களும் அதிகரித்துள்ளனர் ஒருமித்த முடிவு எடுக்க முடியாது திண்டாடும் நிலையே இப்போது காணலாம். சமகாலத்தின் இலங்கை அரசியலை கவனத்தில் எடுத்து அதிகாரப்பரவலுக்காக ஒத்த கருத்துக்கு ஈழத்தமிழர்கள் ஒன்றுபட வேண்டும் என்பதே உண்மை.

• • •

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## அநுரவின் மறதி . .. தொடர்ச்சி ...

பாதிக்கப்பட்டார்கள். இதுவே உண்மை, என்று ஒப்புக்கொண்டதுடன், அரசியலமைப்பு ரீதியில் தமிழ் மக்களுக்கு காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பேன் என்றும் உறுதி பூண்டார்.

அத்தோடு, பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படும் என்றும் வடக்கு மக்கள் மீண்டும் யுத்தம் பற்றி சிந்திக்கமாட்டார்கள், அவர்கள் அமைதியாக வாழ்வதற்கே விரும்புகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மக்களின் துன்பத்தை ஒப்புக்கொண்டமை, இராணுவ முகாம்கள் அகற்றம் மற்றும் அரசியல் தீர்வு குறித்த உறுதிமொழிகள் வரவேற்கத்தக்கவை. எனினும், தமிழர் தேசிய இனப்பிரச்சினை குறித்த தனது நிலைப்பாட்டை சர்வதேச அழுத்தங்கள் மற்றும் கண்காணிப்புக்களுக்கு முக்கியத்துவம் உள்ள ஐ.நா. சபையில் வெளிப்படையாகப் பேசாமல், ஜப்பானில் உள்ள புலம்பெயர் சமூகத்திடம் மட்டும் பேசியமையால் ஏற்படப்போகும் நன்மைகள் தான் என்ன?

சர்வதேச சமூகத்தின் முன்னிலையில், தமிழத்; தேசிய இனப்பிரச்சினையின் தீவிரத்தையும் அதற்கான தீர்வு குறித்த அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாட்டையும் முன்வைக்க ஜனாதிபதி தவறியது, அரசியல் தீர்வின் நேர்மை மற்றும் உறுதிப்பாடு குறித்த கேள்விகளை மிகத் தீவிரமாக எழுப்புகிறது.

புதிய அரசியலமைப்புச் செயற்பாட்டை முன்னெடுப்பதாக ஆளுந்தரப்பு கூறும் நிலையில், ஜனாதிபதியின் இந்த முரண்பட்ட அணுகுமுறை இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சவாலாக அமைகிறது.

நீடித்த, நேர்மையான அரசியல் தீர்வுக்கான பாதைக்கு, தெளிவான உள்நாட்டுப் பங்களிப்புடன், சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும் ‘அரசியல் இயலுமையுடனான’ வெளிப்படைத்தன்மை அத்தியாவசியமானது.

இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தேர்தல் வாக்குறுதிக்கு அமைவாக இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் வசதியான நேரத்தில் ஜனாதிபதியைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளது.

இதற்கு ஜனாதிபதி அநுர எவ்வாறு பதிலளிக் கப்போகின்றார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது. ஆனால், நிஹால் அபயசிங்க கூறுவது போன்று நல்லாட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு செயற்பாடுகளை தொடர்வதாக இருந்தால் தமிழரசுக்கட்சியுடன் அநுர அரசு எத்தனை தடவைகள் சந்தித்தாலும் அது தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கான சந்திப்பாக அமையப் போவதில்லை.

ஏனென்றால், நல்லாட்சிக்கால அரசியலமைப்பு சிங்களத்தில் ஏக்கிய ராஜ்ஜிய என்றும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை தமிழில் ஒருமித்த நாடு என்று அர்த்தம் கற்பத்தி ஒற்றையாட்சியை தமிழர்கள் வலிந்து ஏற்கும் மறைமுக திட்டத்தினை தாரளமாக கொண்டிருக்கின்றது.

அத்தகையதொரு அடிப்படையில் நடைபெறப் போகும் பேச்சுக்கள் இன விடுதலைக்கானதாக அமையும் என்று கொள்ளமுடியாது. இந்தப்புரிதல் அரசாங்கத்துக்கு ஏற்படுவதற்கு முன்னதாக தமிழரசுக்கட்சிக்கு ஏற்படுவது தான் சாலச் சிறந்தது.

நீடித்த, நேர்மையான அரசியல் தீர்வுக்கான பாதைக்கு, தெளிவான உள்நாட்டுப் பங்களிப்புடன், சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும் ‘அரசியல் இயலுமையுடனான’ வெளிப்படைத்தன்மை அத் தியாவசியமானது.

இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தேர்தல் வாக்குறுதிக்கு அமைவாக இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் வசதியான நேரத்தில் ஜனாதிபதியைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளது.

இதற்கு ஜனாதிபதி அநுர எவ்வாறு பதிலளிக்கப்போகின்றார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது. ஆனால், நிஹால் அபயசிங்க கூறுவது போன்று நல்லாட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு செயற்பாடுகளை தொடர்வதாக இருந்தால் தமிழரசுக்கட்சியுடன் அநுர அரசு எத்தனை தடவைகள் சந்தித்தாலும் அது தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கான சந்திப்பாக அமையப்போவதில்லை.

ஏனென்றால், நல்லாட்சிக்கால அரசியலமைப்பு சிங்களத்தில் ஏக்கிய ராஜ்ஜிய என்றும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை தமிழில் ஒருமித்த நாடு என்று அர்த்தம் கற்பத்தி ஒற்றையாட்சியை தமிழர்கள் வலிந்து ஏற்கும் மறைமுக திட்டத்தினை தாரளமாக கொண்டிருக்கின்றது.

அத்தகையதொரு அடிப்படையில் நடைபெறப்போகும் பேச்சுக்கள் இன விடுதலைக் கானதாக அமையும் என்று கொள்ளமுடியாது. இந்தப்புரிதல் அரசாங்கத்துக்கு ஏற்படுவதற்கு முன்னதாக தமிழரசுக்கட்சிக்கு ஏற்படுவது தான் சாலச் சிறந்தது.

• • •

## ஆசியாக் கோப். . . தொடர்ச்சி . . .

காட்டப்பட்ட பகிஷ்கரிப்பு, இறுதிப் போட்டியில் பெரும் கொண்டாட்டமாக மாற்றம் அடைந்தது. தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அதனால் ஈட்டப்படும் இலாபமும் அதிகரிக்கிறது. களத்தில் காட்டப்படும் ஒவ்வொரு மோதல் வெளிப்பாடும் அதிகமான மக்களை விளையாட்டைப் பார்க்கத் தூண்டுகிறது. கிரிக்கெட் விளையாட்டை இராணுவமயமாக்கி அதனை வர்த்தக நலனாக்கும் அணுகுமுறையைப் பார்க்கும் பொழுது, மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் தமது திறமைக்காக அல்லாது தமது தேசியவாத சாகசத்துக்காக வெகுமதி அளிக்கப் படுவதாகவே தோன்றுகிறது.

மறுபக்கமாகப் பார்க்கும் பொழுது பாகிஸ்தானைச் சேர்ந்த கிரிக்கெட் சபையும் விளையாட்டு வீரர்களும் கூட வித்தியாசமானவர்களாகத் தெரியவில்லை. தாக்குதலில் வீழ்ந்து நொருங்கும் போர் விமானங்களைச் சைகையில் காட்டிய ராவுவ்வின் செயற்பாட்டைப் பார்க்கும் பொழுது, விளையாட்டுக்குரிய தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்தாது பார்வையாளர்களைக் கவர்வதில் அவர்கள் கருத்தாயிருந்ததையே பார்க்க முடிகிறது. தமது கிரிக்கெட் விளையாட்டில் கவனத்தைச் செலுத்துவதைத் தவிர்த்து, பத்திரிகைகளில் தமது பெயர்கள் குறிப்பிடப்படவேண்டும் என்பதற்காக எதிர்த்தரப்பைச் சீண்டும் செயல்களைச் செய்வதிலேயே அவர்களும் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, விளையாட்டுக்குரிய ஒழுக்கவிதிகளைக் கடைப் பிடிப்பதற்கு மேலாக, தேசியவாதத்தைக் கடைப் பிடிப்பதிலேயே அடுத்த பரம்பரையைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் முனைப்பாயிருப்பார்கள் என்பதை எதிர்வுகூறக்கூடியதாகவுள்ளது.

தமது சொந்த நாட்டில் நிலவும் சூழ்நிலையை விளையாட்டு வீரர்கள் பிரதிபலிக்கும் பொழுது, விளையாட்டில் அவர்கள் வெளிப்படுத்தும் ஆற்றல் பாதிப்புக்குள்ளாவது மட்டுமன்றி, விளையாட்டு முடிந்ததன் பின்னர் கூட எதிர்த்தரப்பு வீரர்களுடன் அவர்கள் வெளிப்படுத்தும் நடத்தையும் பாதிப்புக்குள்ளாகின்றது. கிரிக்கெட் விளையாட்டில் முன்னணி வகிக்கின்ற முக்கியமான இரண்டு நாடுகள் இவ்வாறான ஒரு நடத்தையை வெளிப்படுத்தும் பொழுது, இந்த விளையாட்டில் புதிதாகக் காலடி எடுத்து வைக்கும் நாடுகளுக்கு, அது ஒரு தவறான முன்னுதாரணமாக மாறிவிடுகின்றது. விளையாட்டு எதனைப் பிரதி பலிக்கின்றதோ அதற்கு முற்று முழுதும் எதிரான ஒன்றையே இந்தக் கோப்பைக் கான போட்டி வெளிப்படுத்தியது. விளையாட்டுக் குரிய பண்புகளுக்குப் பதிலாக ஒரு மோதல் தன்மையையும், ஒரு போரின் போது வெளிப்படுத்தப்படும் உணர்வுகளையுமே விளையாட்டு மைதானத்தில் இந்தக் கோப்பைக்கான தொடர் காட்சிப்படுத்தியிருக் கிறது.

கிரிக்கெட் விளையாட்டின் எதிர்காலத்தையும் இந்த விளையாட்டை மனமார இரசிக்கின்றவர்களின் நலனையும் கருத்தில் எடுக்கின்ற பொழுது, இந்த இரண்டு குழுவினரும் ஒருவரையொருவர் சந்திக்காமல் இருப்பதே நன்மையாக இருக்கும். இவ்வாறாக அரசியல் கலப்பின்றி விளையாட்டை இரசிகர்கள் இரசிக்கக் கூடியதாகவிருக்கும். கிரிக்கெட் விளையாட்டு இப்படி இருக்கக்கூடாது. இந்தியா-பாகிஸ்தான் சந்திக்கும் ஒவ்வொரு கிரிக்கெட் போட்டியையும் இலாபத்துக்கான ஒரு போர்க்களமாக மாற்ற இதனை நடத்துபவர்கள் விரும்புவார்களாக இருந்தால், அதனை அவர்கள் பகிரங்கமாகவே சொல்வது தான் நன்மை பயக்கும். 2025 ஆசியக் கோப்பையைப் பார்க்கும் பொழுது, மைதானத்தில் பெறப்பட்ட ஓட்டங்களுக்கோ அல்லது அங்கே வீழ்த்தப்பட்ட விக்கெட்டுகளுக்கோ அது நினைவுகூரப்படாது. அதற்கு மாறாக இந்த விளையாட்டுக்கு ஏற்படுத்தப்பட்ட அபகீர்த்திக்காகவே அது நினைவுகூரப்படும். இது இந்த விளையாட்டின் மிகக் கவலைக்குரிய நினைவாக வரலாற்றில் பதிவுசெய்யப்படும்.

தங்கள் அணுகுமுறையை இந்த இரண்டு குழுக்களும் மாற்றும் வரை, அவர்களைத் தடைசெய்வது தான் இதற்கான ஒரு சிறந்த தீர்வாக இருக்கும். ஏன் சிறீலங்கா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும் உலகம் முழுவதும் உள்ள நடுநிலையான பார்வையாளர்களும் தங்கள் பல்தரப்பு கிரிக்கெட் விளையாட்டை தங்களுக்கிடையே நிலவுகின்ற அரசியல் மோதலுக்குப் பழிதீர்க்கும் இடமாக மாற்றும் மோசமான செயற்பாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டுமா? என்ற கேள்வியைக் கேட்கத் தூண்டுகின்றது. இந்த இரண்டு நாடுகளுக்கும் ஒரு தற்காலிக தடை விதிக்கப்படுகின்ற பொழுது தான், தேசியவாதத்தை வெளிப்படுத்தும் ஒரு களமாக கிரிக்கெட் விளையாட்டை மாற்ற முடியாது என்ற செய்தி பலமாகச் சென்று சேரும்.

உண்மையில் அவ்வாறான ஒரு தடையைப் போடுவது என்பது இலகுவான காரியமல்ல. நிதிவாரியாகப் பார்க்கும் பொழுது இந்தியா உலகிலேயே அதிக இலாபத்தை ஈட்டக்கூடிய ஒரு பலமான நாடாகத் திகழ்கிறது. பாகிஸ்தானும் அதற்கு எந்த வகையிலும் விதிவிலக்கல்ல. இந்த இரண்டு நாடுகளும் விளையாடுகின்ற பொழுது பாரிய எண்ணிக்கையானோர் விளையாட்டைக் கண்டுகளிப்பதால், இதற்கு நிதிவழங்குபவர்கள் அதற்கு முண்டியடிக்கிறார்கள். பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது ஒரு முக்கிய சந்தையைக் கைவிடுவதற்குத் தயாராக இருக்காது. இங்கே ஒரு முரண்நகை இருப்பதை அவதானிக்கலாம். கிரிக்கெட் விளையாட்டின் விளையாட்டுப் பண்பைப் பாழாக்கும் போட்டிகள் தான், அந்த விளையாட்டு தொடர்ந்து நிலைப்பதற்கான பணத்தையும் வழங்குகிறது. எடுக்கப்படும் முடிவுகளுக்கு பணம் அடித்தளமாக இருக்கும் வரையும், அழிவை ஏற்படுத்தக்கூடிய இவ்வாறான நிலைமையின் பணயக்கைதியாக கிரிக்கெட் விளையாட்டு தொடரப்போகிறது என்பதே உண்மையாகும்.

நன்றி: அல்ஜஸீரா

**மலையக பல் ... தொடர்ச்சி ...**

பத்திரம் கூட அடுத்த வாரம் அமைச்சரவைக்கு கொண்டு வரப்படுகின்றது. மலையக கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பது அவரது கனவு. எனவே அவரது மரணம் நிகழ்ந்து முதலாம் ஆண்டு நினைவஞ்சலியின் போது கொட்டகலை தேசிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும்.' என்று குறிப்பிட்டிருந்தார். இப்படி காலக்கெடுவுடன் உறுதிமொழி வழங்கப்பட்ட போதும் அது வெறும் வாய் வார்த்தையாக கடந்து போனது.

எவ்வாறாயினும் தேசிய மக்கள் சக்தியின் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், 'மலையக பல்கலைக்கழக விடயம் என்பது அரசியல் இலாபத்துக்காக முன்வைக்கப்பட்ட ஒரு போலி தேர்தல் பிரசாரம்' என்று அண்மையில் ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்தார். அத்துடன் பல்கலைக்கழகம் என்பது தேவையான விடயம் என்ற அடிப்படையில் இது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறாக இரு வேறு நிலைப்பாடுகள் வெளிப்படுகின்ற நிலையில் இது குறித்து மலையக பெருந்தோட்ட மக்களும் சிந்திக்க வேண்டும். மலையக பல்கலைக் கழகம் என்பது இன்றியமையாத ஒரு தேவையாக காணப்படுகின்றது. இதற்காக சிவில் அமைப்புகள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், வர்த்தக சமூகத்தினர் மற்றும் இளைஞர் யுவதிகள் என அனைவரும் ஒருமித்த கோரிக்கையை முன்வைக்க வேண்டும். வெவ்வேறு தரப்புகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த கோரிக்கையை முன்வைக்கின்ற போது அதன் மீதான அழுத்தம் குறைவாகவே காணப்படுகின்றது என்பதனையும் அனைவரும் உணர வேண்டும்.

• • •

**அரசாங்கம் தனது . .. தொடர்ச்சி ...**

இலங்கையில் மாற்று வலுசக்தியை வலுப்படுத்தும் முகமாக காற்றாலை மின் கோபுரங்கள். சூரியசக்தி மின்ஆலைகள் எனப் பல்வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னார்த்தீவு சுற்றிவர கடலைக் கொண்டிருப்பதன் காரணமாக காற்றாலைகளை அமைக்க அரசாங்கம் தனியார் துறைகளுக்கு ஊக்கமளித்துவருகின்றது.

மாற்றுவலுசக்திகள் தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் மக்கள் செறி வாக வாழும் பிரதேசங்களில் மிக அதிகப் படியான காற்றாலைகளை நிறுவுவது மக்களின் அன்றாட வாழ்வில் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என பதும் உண்மையானது. ஒவ்வொரு காற்றாலை மின்கோபுரத்தை நிறுவும் பொழுதும் எழுபது அடிக்கு மேல் நிலம் தோண்டப்படுகின் றது. இத னால் நிலத்தடி நீர் மாசுபடும்.

அரசாங்கம் இவற்றைப் புரிந்துகொண்டு ஆட் சியாளர்கள் தேர்தல்காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையும் மன்னார் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் கவனத்தில் எடுத்து ஏனைய காற்றாலை மின்கோபுர அமைப்பு களை வேறு பொருத்தமான இடங் களுக்கு மாற்றுவதே சிறந்ததெனக் கருதுகிறோம் என்றுள்ளது.

**ஜெனரல் இசட் ... தொடர்ச்சி ...**

நகரங்களில் பேரணிகள் நடத்தினர், உள்ளூர் ஊடகங்கள் ஒளிபரப்பிய காட்சிகளின்படி, "ரஜோலினா வெளியேறு", "நாங்கள் ஏழைகள், கோபமானவர்கள் மற்றும் மகிழ்ச்சியற்றவர்கள்" மற்றும் "மடகாஸ்கர் எங்களுடையது" என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

கடந்த வாரம் இந்தியப் பெருங்கடல் நாட்டில்மின்தடைமற்றும்தண்ணீர்பற்றாக்குறை தொடர்பாக போராட்டங்கள் முதலில் வெடித்தன, பின்னர் அது அன்டனனரிவோவிற்கு அப்பால் விரைவாக பரவியது, கலகத் தடுப்பு காவல்துறையினர் கண்ணீர் புகை மற்றும் ரப்பர் தோட்டாக்களை வீசி கூட்டத்தை கலைத்தனர். இந்த வன்முறையால் அன்டனனரிவோவில் மாலை முதல் காலை வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.. முக்கிய வீதிகள் மூடப் பட்டன.

இது வரையில் அங்கு 22 பேர் கொல லப்பட்டதாகவும், 100க்கும் மேற்பட்டோர் காய மடைந்ததாகவும் ஐ.நா அறிக்கை தெரிவித்துள்ளது.. பாதுகாப்புப் படையினர் "தேவை யற்ற பலத்துடன்" "அமைதியான" பேரணிகளில் தலையிட்டதாகவும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதாகவும், போராட் டக்காரர்களை அடித்து கைது செய்ததாகவும் ஐ.நா குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் வெளியுறவு அமைச்சகம் ஐ.நா.வின் உயிரிழப்பு புள்ளிவிவரங்களை "தவறான தகவல்" என்று நிராகரித்துள்ளது.

ஆப்பிரிக்க ஒன்றியமும் தென்னாப்பிரிக்க மேம்பாட்டு சமூகமும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினரும் நிதானத்தைக் கடைப்பிடித்து பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

**காசாவுக்கு உதவி ... தொடர்ச்சி ...**

படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டது, அதில் இருந்த ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு இஸ்ரேலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டத்தைத் தடுக்கும் முயற்சிகள் வியாழக் கிழமையும்(2) தொடர்ந்தன.

இந்த கப்பல் தொகுதியில் இஸ்தான்புல், ஏதென்ஸ், பியூனஸ் அயர்ஸ், ரோம், பெர்லின் மற்றும் மாட்ரிட் உள்ளிட்ட உலகெங்கி லும் உள்ள நகரங்களில் உள்ள செயற்பாட்டாளர்கள் சென்றதால், அவர்களின் கைது உலகத் தலை வர்களிடமிருந்து விரைவான விமர் சனங்களுக்கு வழிவகுத்துள்ளது. 500 பேர் கொண்ட இந்த குழுவில் அமெரிக்கா, யுனைடெட் கிங்டம், பெல் ஜியம், ஸ்பெயின், மலேசியா, துருக்கி மற்றும் கொலம்பியா உட்பட குறைந்தது 44 நாடுகள் பிர திநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளன.

பிரித்தானியா, குவைத்து, துருக்கி, மலேசியா, ஐக்கிய அரபு எமிரேற்ஸ், பலஸ்தீனம், பாகிஸ்தான், அமெரிக் தென்னாபிரிக்கா, இத் தாலி, ஜேர்மனி, ஸ்பெயின், கிறீஸ் உட்பட பல நாடுகளின் உலகத் தலைவர்களின் எதிர் வினைகள் மற்றும் வெளிப்படையான கண்டனங்கள் இஸ்ரேலின் நடவடிக்கை குறித்து வெளிவந்துள்ளன. இஸ்ரேல் தடுத்து வைக்கப் பட்டுள்ள தங்கள் குடிமக்களுக்கு தூதரக சேவைகளை வழங்க வேண்டும் என்ற அழைப்பு கள் விடுக்கப்பட்டுள்ளன.

அதேசமயம், இந்த விடையத்தில் வெள்ளைமாளிகை தலையிட வேண்டும் என அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் 20 பேர் அமெரிக்க அரசை கேட்டுள்ளனர்.









இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்






25.7 km
Niranjan Special
Niranjan Special
0772096924
Karam Sundal
காரம் சுண்டல்
காரம் சுண்டல்
காரம் சுண்டல்

